Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 03 வியாழக்கிழமை (18-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:359

## வாழைச்சேனைப் பகுதியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

ஏறாவூர்,நவ.18

வாழைச்சேனை, கொண்டையனகேணி கிராமத்தில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு தலையில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான கிருஸணபிள்ளை தணிகாசலம் (வயது - 49) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரவு 7.45 மணியளவில் வீட்டில் தொலைகாட்சி பார்த்துக்கொண்டிருந்தவேளை அங்கு வந்த துப்பாகி நபர் இவரை வெளியே அழைத்துச் சிறிது நேரம் உரையாடிவிட்டு, அவரைச் சுட்டுக்கொலைசெய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இக்கொலைச் சம்பவத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுக்கு கேடயங்கள்; மாணவர்கள் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தேசியத்தலைவருககு வழங்கப்படவேண்டிய, தலைவருக்கான வாழ்த்துச்செய்தி அடங்கிய கேடயங்களை யாழ். பலகலைக்கழக சமூகத்தினரும் யாழ். மத்திய கலலூரி சமூகத்தினரும் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் வைத்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்தனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் குழுவினர்கள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைமைச் செயலகத்திலிருந்து புறப்பட்டனர்.

இக்குழுவில் யாழ். பல்கலை அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த 30 மாணவர்களும் பல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# சம்பள உயர்வு அறிவிப்பு இன்று பட்ஜெட்டில் வரும்!

## புதிய அரச அதிபர் ஜனவரியில் பதவியேற்பு

கொழும்பு,நவ.18

வவுனியா அரச அதிபராகப் பணியாற்றும் கே.கணேஷ் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் யாழ். அரச அதிபராகப் பதவியேற்கவிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

யாழ். அரச அதிபராகப் பணியாற்றும் செ.பத்மநாதன் வடக்கு - கிழக்கு வீடமைப்புத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனால் முன்னர் வாக்குறுதி அளித்த அதிகரிப்பை அரசு வழங்கமாட்டாது

கொழும்பு,நவம்பர்18

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நாடாளுமன்றத்தில் இன்று பிற்பகல் தாக்கல் செய்கின்றார்.**

**அதில், அரச ஊழியர்களுக்கும் ஒரு குறித்த தொகை சம்பள உயர்வு நிச்சயம் உண்டு. ஆனால், அரசுத்தரப்பு முன்னர் வாக்குறுதி அளித்த எழுபது வீத அதிகரிப்பாக அது இருக்காது. பெரும்பாலும் அரச ஊழியர்களுக்கு இரண்டாயிரம் ரூபா வரை சம்பள அதிகரிப்பை நிதி அமைச்சர் பிரேரிப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

அதீத பரபரப்புக்கும், மிகுந்த எதிர்பார்ப்புகளும் மத்தியில் ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பு அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் இன்று பிற்பகலில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டமைப்பினர் ஆட்சிக்கு வரமுன்னர் - தேர்தல் காலத்தில் - தாம் ஆட்சிக்கு வந்தால் அரச ஊழியர்களுக்கு எழுபது வீத சம்பள உயர்வை வழங்குவோம் எனப் பெரிதாகப் பிரசாரம் செய்தனர்.

ஆட்சிக்கு வந்து ஏழரை மாதங்களுக்குப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உரிய சம்பள உயர்வு இல்லாவிட்டால் உடன் வீதிக்கு இறங்கிப் போராட்டம்!

### பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் சமயம் ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு,நவ.18

அரசு இன்று சமர்ப்பிக்கும் வரவு - செலவுத்திட்டத்தில், வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஜே.வி.பி. இறங்கும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவானபோது சொல்லப்பட்ட விடயங்கள் எதுவுமே இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அரசுக்கு எதிராகப் போராடாவிட்டால் எதையும் சாதிக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

- இப்படிக் கூறுகிறார் ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர் லால்காந்த.

நேற்றுக் கொழும்பு நூலகக் கேட்போர் கூடத்தில் சுவிஷேச தொழிற்சங்கக கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சமயமே அமைச்சர் லால்காந்த இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அரசு தனது முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை வியாழன் பிற்பகல் 2.30 மணிக்கு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது.

எமது கூட்டமைப்பு அரசின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் என்பதால் அனைவரும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் சிங்கிற்கு தமிழ்க் கூட்டமைப்பு விரைவில் கடிதம்

கொழும்பு,நவ.18

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்படவிருக்கும் உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தை வாபஸ்பெறுமாறு தமிழ்த் தேசியக் கூட்டடைப்பு இந்தியாவிடம் உத்தியோக பூர்வமாகக் கோரிக்கை விடுக்கவுள்ளது.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை அனுப்ப கூட்டமைப்பு தயாராகி வருகின்றது.

உததேச பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இந்தியத் தலைவர்களை நேரில் சந்தித்துப் பேசுவதற்கான விருப்பத்தையும் தமிழ்க் கூட்டமைப்பு தனது கடிதம் ஊடாக இந்தியாவுக்கு தெரியப்படுத்தும்.

விடயமறிந்த வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன. (ஐ)

## பிராந்திய மட்டச் சந்திப்புகளில் புலிகளின் தளபதிகள் பங்குபற்றுவர்

### கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவிப்பு

கிளிநொச்சி,நவ.18

பிராந்திய மட்டத்திலான புலிகள் - படையினர் சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் கலந்துகொள்வது தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று அரசியல்துறைப் பொறுபாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேசியுள்ளார்.

பிராந்திய மட்டத்தில் இடம்பெறவிக்கும் அடுத்த சில சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் கலந்துகொள்வர் என்றும்-

அந்தச் சந்திப்புக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தே எதிர்காலத்தில் அவர்கள் தொடர்ந்தும் சந்திப்புக்களில் கலந்துகொள்வது குறித்து முடிவுசெய்யப்படும் எனவும் -

புலிகள் தரப்பில் இருந்து கண்காணிப்புக் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்த சமயம் இது விடயம் குறித்து அவருடன் உரையாடி இருந்தார்.

பிராந்திய மட்டத்தில் புலிகள் - படையினர் இடையே நடத்தப்பட்ட சந்திப்புக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை மதித்து நடக்கப் படையினர் தவறிவந்துள்ளனர் என்று தெரிவித்து, இந்தச் சந்திப்புக்களால் பயனேதும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு துறைமுக வாசலில் தமிழ்ச் சிறுவன் சந்தேகத்தில் கைது!

கொழும்பு,நவ.18

கொழும்பு துறைமுகத்துக்குள் நுழைய முற்பட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் தமிழ்ச் சிறுவன் ஒருவன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

நேற்றுமுன்தினம் கிராண்ட்பாஸ்ஹிங்குருகடைச் சந்தியின் ஊடாக துறைமுகத்துக்குச் செல்லும் வழியில் சைக்கிள் ஒன்றில் துறைமுக வாயிற் கதவுவரை சென்ற வவுனியாவைச் சேர்ந்த - ஜீவராஜா கேதீஸ்வரன் (வயது 15) என்ற சிறுவனே கடற்படையினரால் கைது செய்யப்பட்டான்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் நேற்றுமாலை பெருந்திரளான பக்தர்கள் கூடியிருக்க சூரன் போர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. முருகப்பெருமான் வீதி வலம் வந்து சூரனை சங்காரம் செய்த காட்சிகளையே படத்தில் காண்கிறீர்கள். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மட்டக்களப்பில் அடைமழையால் 40 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பில் பெய்துவரும் மழை காரணமாக தாழ்நிலப் பிரதேசங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. சுமார் 40 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்மழையால் காத்தான்குடி, மஞ்சத்தொடுவாய், கொச்சிமுனை, சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை, கண்ணகிபுரம், ஊரணி, ஆரையம்பதி ஆகிய பிரதேசங்களில் வெள்ள அபயாம் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

காத்தான்குடியில் மழைகாரணமாக 5 ஆயிரத்து 971 குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் விவரங்கள் பிரதேச செயலாளர்களிடம் கோரப்படுவதாகவும் -

அவை கிடைக்கப் பெற்றதும் நிவாரணம் வழங்கப்படும் எனவும் - மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ-6)

# வடமராட்சி கிழக்கில் 25 ஆம் திகதி மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

வடமராட்சி,நவ.18

வடமராட்சி கிழக்கில் மாவீரர் தினத்தினை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறை செய்துள்ளது.


முக்கிய இடங்களில் வளைவுகளும், பதாகைகளும் கட்டுவதற்காகன ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர் எதிர்வரும் 25 திகதி உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

25ஆம், 26 ஆம், 27ஆம் திகதிகளில் உடுததுறை மகா வித்தியாலய மைதானத்தில் மாவீரர் தினத்தையொட்டிய கலைநிகழ்வுகளும் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் சிறப்பு உரைகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-182)



தமிழீழத் தேசியத் தலைவருக்கான வாழ்த்துச் செய்தி அடங்கிய கேடயத்தினை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்தபோது....



யாழ்.மத்திய கல்லூரி மாணவர் குழுவினர், நேற்றுக் கிளிநொச்சியில் தமிழீழத் தேசியத் தலைவருக்கான பிறந்தநாள் கேடயத்தை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்த காட்சி.

# வடமராட்சி கிழக்கு மக்கள் பிரபாகரனுக்கு வாழ்த்துச் செய்தி

வடமராட்சி,நவ.18

வடமராட்சி கிழக்கிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் ஒன்றிணைந்து தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளை ஒட்டி வாழ்த்துச் செய்தி ஒன்றைக் கையளிக்கவுள்ளன.

தலைவரின் பிறந்ததினமான எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த 50 பேர் கொண்ட குழுவினர் சைக்கிள்களில் வாழ்த்துச் செய்தியை எடுத்துக்கொண்டு முல்லைத்தீவுக்குச் செல்வார்கள்.

முல்லைத்தீவில் அன்றையதினம் மாலை 6 மணிக்கு இடம்பெறும் தேசியத் தலைவரின் பிறந்ததின நிகழ்வில் வாழ்த்துச் செய்தி ஒப்படைக்கப்படும்.

வாழ்த்துச் செய்தி, வடமராட்சி கிழக்கு மக்களின் சார்பாக அங்கு வாசிக்கப்படும். தொடர்ந்து அச்செய்தி பிரபாகரனிடம் சேர்ப்பிக்கப்படும். (ஐ-173)

## மாவீரர் நாள் - 27

மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்; சுதந்திர சிற்பிகள்; எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள்.

வே.பிரபாகரன் - தமிழீழத் தேசியத் தலைவர்.

### கோப்பாயில் நேற்று இடம்பெற்ற விபத்தில்

# காயமடைந்தவர் மோ.சைக்கிளை கைவிட்டுத் தப்பியோடி விட்டார்!

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு முன்பாக - பருத்தித்துறை வீதியில் நேற்று இரண்டு மோட்டார்சைக்கிள்கள் மோதிக்கொண்டன. இரண்டு மோட்டார்சைக்கிள் ஓட்டிகளும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர். எனினும், அவர்களில் ஒருவர் காயங்களுடன் நிற்காமல் தப்பியோடிவிட்டார். அவரது காலில் இருந்து துண்டிக்கப்பட்டது எனக் கூறப்படும் விரல் ஒன்று அடுத்தவருடைய மோட்டார்சைக்கிளில் சிக்கியிருப்பது பின்னர் தெரியவந்தது.தப்பியோடியவரது மோட்டார் சைக்கிளையும் துண்டிக்கப்பட்ட விரலையும் பொலீஸார் எடுத்துச்சென்றனர்.

காயமடைந்த மற்றைய நபர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை - நேற்று வேறு இடங்களில் இடம்பெற்ற இரண்டு மோட்டார்சைக்கிள் விபத்துக்களில் படுகாயமடைந்த மேலும் மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரும் அரியாலையைச் சேர்ந்தவருமான குலநாயகம் ரமேஷ் (வயது 29) என்பவரும்-

தருமபுரத்தில் மோட்டார்சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதியதில் மோட்டார்சைக்கிளை ஓட்டிச் சென்றவரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் சிவச்செல்வன் (வயது -28) என்பவரும் -

காக்கைதீவுப் பகுதியில் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - ஓட்டோ விபத்தில் மோட்டார்சைக்கிளின் பின்னாலிருந்து சென்றவரான சாவற்கட்டு, சுதுமலையைச் சேர்ந்த சேகரன் திலக்ஷன் (வயது -15) என்பருமே படுகாயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். (ஐ-12-15)

# வர்த்தகர்களுடன் கலந்துரையாடல்

கொக்குவில், கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் மாலை 5 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும்-

கோண்டாவில் பகுதி வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் கோண்டாவிலில் அமைந்துள்ள தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத்தில் மாலை 5.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-86)

### 1999 இல் மோதலில் வீரச்சாவடைந்த

# மாவீரர்கள் இருவருக்கு நினைவுக்கல் நடுகை

சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்த இரு மாவீரர்களினது நினைவுக் கற்கள் நேற்றுமுன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடப்பட்டன.

99 ஆம் ஆண்டு மன்னார் - பள்ளமடுவில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த கப்டன் தமிழேந்தி -வில்லியம் றொசான் (யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி) என்பவரினது நினைவுக் கல்லும் -

அதே ஆண்டு வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைகேசன் அல்லது கண்ணன் - (விஸ்வலிங்கம் சிறீதரன்) என்ற மாவீரரினது நினைவுக்கல்லும் நடப்பட்டன.

இரண்டு மாவீரர்களினதும் பெற்றோர்கள் நினைவுச் சுடர் ஏற்றிவைத்ததுடன் மலர்மாலையினையும் அணிவித்தனர்.

இந்த நிகழ்வு மாவீரர் துயிலும் இல்லத்தைச் சேர்ந்த கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் நினைவுரை ஆற்றினார். (ஐ-6-86)

# ரிஷாத்தின் அமைச்சு வாகனம் மீது எருக்கலம்பிட்டியில் தாக்குதல்!

புத்தளம்,நவ.18

புனர்வாழ்வு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனின் அமைச்சுக்குச் சொந்தமான வான் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு புத்தளம் பகுதியிலுள்ள எருக்கலம்பிட்டி மீள்குடியேற்றக் கிராமத்துக்கு அருகில் வைத்துத் தாக்கப்பட்டது. வானின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

இப்பகுதியில் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீனின் ஆதரவாளர்களுக்கும் வேறு சிலருக்கும் இடையில் எழுந்த வாக்குவாதத்தையடுத்து, அது குறித்துக் கவனிக்கச் சென்ற வாகனம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இரு முஸ்லிம் இளைஞர்களும் தாக்கப்பட்டனர். இவர்கள் தற்சமயம் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இரு சந்தேகநபர்களை புத்தளம் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். புலன்விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-க-6)

# கொடிகாமம் நாகநாதன் வீதியில் மழையினால் வெள்ளம் தேக்கம்

கொடிகாமம் பகுதியில் பெய்த அடைமழையை அடுத்து நகரப்பகுதியில் உள்ள நாகநாதன் வீதியில் பெரும் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால், பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகள் அந்த வீதியைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலத்தில் கல்வி கற்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த வீதியூடாகவே பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த வீதியில் தற்போது பெரும் வெள்ளம் தேங்கியுள்ளதால் மாணவர்கள் அனைவரும் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து கண்டி வீதியூடாகவே பாடசாலைக்குச் சென்றடைகின்றனர்.

இந்த வீதியில் வெள்ளம் தேங்குவதைத் தடுப்பதற்காக பொதுமக்களால் வாய்க்கால் தோண்டப்பட்டது. எனினும், பின்னர் அதனை முழுமையாக நிறைவேற்ற எந்த ஒத்துழைப்பும் கிடைக்காததால் அது கைவிடப்பட்டது.

இதேவேளை -

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்துதருமாறு சாவகச்சேரி பிரதேச் சபைக்கு அப்பகுதி மக்கள் பலமுறை அறிவித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## சாயி சிந்தனை

### மனம் ஆத்மாவைச் சேரவேண்டும்



இன்று மனிதன் அருந்தும் நீர், சுவாசிக்கும் காற்று இவை அனைத்தும் மாசடைந்துள்ளன. அவற்றைப் பரிசுத்தமாக்குவதற்கு அரசு எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறது. முதன்முதலில் மனிதன் தன் மனதில் புகுந்துள்ள மாசுக்களை நிர்மூலமாக்கவேண்டும். மனிதன் தன் மனதை எதன் மீது செலுத்தவேண்டுமோ அதன்மீது செலுத்தாமல் உலகியலான சுகபோகங்களின் மீது செலுத்துகிறான். அதனால், மனது மாசுபடிந்து, திருப்தியில்லாமல் தவிக்கிறது. இந்த மாசு போகவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? மனது எங்கிருந்து பிறந்ததோ அங்கேயே அதைத் திருப்பி அனுப்பவேண்டும். நீரில் வளர்ந்து, தவறி வெளியே விழுந்து தவிக்கும் மீனை, மெதுவாகப் படுக்கையில் இட்டு அதற்குத் தேநீரும், உணவும் அளித்தால் அது உயிர் வாழுமா? அது பிறந்த இடமான நீரில் சேர்த்தால்தான் அதற்கு அமைதி கிடைக்கும். அதேபோல் மனிதன் தனது மனதை அதன் பிறந்த இடமான ஆத்மாவிடம் சேர்க்கவேண்டும். மனச்சாந்தி ஆத்மாவிடமிருந்துதான் கிடைக்கும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

# அமெ.பிரதி ராஜாங்கச் செயலர் ஆர்மிடேஜ் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்



வாஷிங்ரன்,நவ.18

அமெரிக்கப் பிரதி ராஜாங்கச் செயலாளர் ரிசர்ட் ஆர்மிடேஜ் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் என அமெரிக்க ராஜாங்கப் பேச்சாளர் றிச்சர்ட்பவுச்சர் தெரிவித்தார்.

நவம்பர் 2 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலையடுத்து, ஆர்மிடேஜ் இலங்கை வரவிருந்தார். பின்னர், இவரது பயணம் ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆர்மிடேஜ், பல சந்தர்ப்பங்களில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிநிதியாக இலங்கை வந்துள்ளார்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் கொலின் பவலின் ராஜினாமாவுடன் சேர்த்து ஆர்மிடேஜின ராஜினாமாக் கடிதமும் சமர்ப்பிக்கப்பட்டதாக ரிச்சர்ட் பவுச்சர் தெரிவித்தார்.

1945 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த ரிச்சர்ட் ஆர்மிடேஜ், 1967 ஆம் ஆண்டு தன்னுடைய பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

பின்னர் அமெரிக்கக் கடற்படையில் இணைந்து பணியாற்றிய ஆர்மிடேஜ் வியட்நாம் யுத்த காலத்தில் அங்கு பணியாற்றியவர்.

1975 ஆம் ஆண்டு அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆலோசகராகவும் பணியாற்றினார். 1980 ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றீகனின் தேசியக் கொள்கை ஆலோசகராகவும் பணியாற்றினார்.

2001 ஆம் அண்டு மார்ச் 26 ஆம் திகதி முதல் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி ராஜாங்கச் செயலாளராகவும் சேவையாற்றினார்.

ஆர்மிடேஜைத் தவிர வேறு உயர் நிலை அதிகாரிகள் யாராவது ராஜினாமாச் செய்துள்ளனரா என ரிச்சர்ட் பவுச்சரிடம் கேட்ட போது, "பொதுவாக அனைவரிடமும் ராஜிநாமாவைச் சமர்பிக்குமாறு கோரிக்கைகள் விடப்பட்டவில்லை" என்றார்.

எனினும், ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட விருப்பின் பேரிலேயே ராஜினாமாவைச் சமர்ப்பிக்கிறார்கள் என ரிச்சட் பவுச்சர் மேலும் கூறினார். (க)

## கொலம்பியாவில் தாக்குதல்: 10 படையினர் உயிரிழப்பு!

லண்டன்,நவ.18

கொலம்பியாவில் இடம்பெற்ற தாக்குதலில் அரச காவல்ப் படையினர் 10 பேர் கொல்லப்பட்டனர். தேசிய விடுதலை இராணுவம் என்ற தீவிரவாத இயக்கமே இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இயக்கத்தில் சுமார் 100 உறுப்பினர்களே அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, இந்த இயக்கமே கொலம்பியாவில் இரண்டாவது பெரிய இயக்கமாகக் கருதப்படுகிறது. (க-3)

## கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை மார்க்ரெட் ஈராக் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை!

பக்தாத்,நவ.18

ஈராக்கில் கடத்தப்பட்ட 'கேர் இண்டர்நெஷனல்' நிறுவனத்தின் இயக்குநர் மார்க்ரெட் ஹஸனைத் தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

இவர் சுட்டுக்கொலைசெய்யப்படும் காட்சியை அல் - ஜெஸீரா அரபுத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

ஒளிபரப்பப்பட்ட காட்சிகளை நாம் ஆராய்ந்து பார்த்ததில் அவை உண்மையானவை எனப் புலப்படுவதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் 19 ஆம் திகதி ஈராக்கிய தலைநகர் பக்தாத்தில் வைத்து சர்வதேச உதவி வழங்கும் நிறுவனமான 'கேர் இண்டர்நேஷனல்' அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாத ஆயுததாரிகளால் பணயக் கைதியாகப் பிடித்துச் செல்லப்பட்டார்.

இவரை விடுவிக்குமாறு பிரிட்டன், அயர்லாந்து ஆகிய இரு நாடுகளும் கூட்டாகக் கோரிக்கையை விடுத்திருந்தன. ஆனால், அக் கோரிக்கையினைத் தீவிரவாதிகள் நிராகரித்துவிட்டனர்.

இந்நிலையிலேயே மார்க்ரெட் ஹஸன் கொலை செய்யப்பட்ட காட்சிகளை ஈராக்கிய தீவிரவாதிகள் அல்-ஜெஸீராத் தொலைக்காட்சிக்கு அனுப்பியுள்ளனர்.

முன்னதாக இந்த ஒளிநாடா தம்மிடம் ஓரிரு நாள்களுக்கு முன்னரே வந்து சேர்ந்தபோதும் உண்மைத் தன்மையை ஆராயாமல் தாம் ஒளிபரப்பப் போவதில்லை என அல்-ஜெஸீரா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதி ஒருவர் மார்க்ரெட் ஹஸனின் தலையில் துப்பாக்கியால் சுடுகின்ற காட்சிகள் ஒளிநாடாவில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அல்-ஜெஸீரா மேலும் அறிவித்துள்ளது.

இந்த ஒளிநாடாவை ஆராய்ந்த பிரிட்டிஷ் இராணுவத்தினரும், வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ட்ரோவும், 'ஒளிநாடாவில் உள்ள காட்சிகள் உண்மையானவை' என உறுதி செய்துள்ளனர்.

அயர்லாந்து, பிரிட்டன், ஈராக் ஆகிய மூன்று நாடுகளிலும் மார்க்ரெட் ஹஸன் குடியுரிமை பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் ஐவரிகோஸ்ட்டையைவிட்டு வெளியேற்றம்

நியூயோர்க்,நவ.18

ஐவரிகோஸ்ட் நாட்டைவிட்டு பல்லாயிரக் கணக்கானோர் வெளியேறி வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தகவல் வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் நாட்டின் எல்லையைக் கடந்து செல்லும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன என்று ஐநா.சபை தெரிவிக்கிறது.

இதனால், அப்பகுதியில் ஐ.நா. ஊழியர்கள் அவசர தேவைக்கான உதவிப் பொருள்களை விநியோகித்து வருகின்றனர்.

ஐவரிகோஸ்டிலிருந்து வெளியேறும் மக்களில் அநேகர் லைபீரியாவிற்குள் செல்கின்றனர். இதனால், அந்நாடு பல அசௌகரியங்களை எதிர்கொள்கிறது.

போரினால் பல ஆண்டுகள் பாதிப்புற்றிருக்கும் லைபீரியாவிற்குள் அயல் நாடான ஐவரி கோஸ்ட் மக்கள் தஞ்சமடைவது குறித்து அந்நாட்டு அரசு ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக ஐநா.சபையின் அகதிகளுக்கான நிறுவனம் தெரிவித்தது.

முன்னதாக ஐ.நா.பாதுகாப்புச்சபை ஐவரி கோஸ்ட் தொடர்பாக ஆயுத விற்பனைத் தடை விதித்திருப்பதை அந்நாட்டின் கிளர்ச்சியார்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனால், இந்தத் தடை நியாயமற்றது, ஏனெனில், இனிமேல் கிளர்ச்சியாளர்கள் மட்டுமே சட்டவிரோத வழியில் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என அந்நாட்டின் தூதுவர் ஐநா. சபையில் தெரிவித்துள்ளார். (க-3)

## மோசடியை ஆராயும் ஐ.நாவின் முயற்சியை ஈராக் நிராகரிப்பு

பக்தாத்,நவ.18

ஈராக்கில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் எண்ணெய்க்கான உணவுத்திட்டத்தின் மோசடிகள் குறித்து ஆராய ஐக்கிய நாடுகள்சபை மேற்கொண்ட முயற்சிகளை ஈராக் நிராகரித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் சபையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றே இதற்கான விசாரணைகளில் ஈடுபடவிருந்தது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆதாரங்களில் இருந்து, அடுத்த ஆண்டு ஜனவரி மாத அளவில் இவ்விடயம் குறித்து பகிரங்கப்படுத்த முடியும் எனத்தெரிகிறது. (க-3)

## ஹொலிவூட் நடிகர் ஆர்ணல்ட் புதிய இயக்கமொன்றை ஆரம்பிப்பு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில ஆளுநரும் ஹொலிவூட் நடிகருமான ஆர்ணலட் புதிய இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளார்.

இந்த இயக்கத்தின் மூலம் மக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்தவும் அவர் திட்டமிட்டுள்ளார். அமெரிக்க அரசியல் சட்டம் 2, பிரிவு - 1 இல் சிறு மாற்றம் கொண்டுவரவே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக ஆர்ணல்ட் தெரிவித்தார்.

இச்சட்டத்தின்படி அமெரிக்காவில் பிறக்காத ஒருவர் அந்நாட்டு ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது. எனவே, இந்தச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், ஒஸ்ட்ரியாவில் பிறந்த ஆர்ணல்ட் எதிர்வரும் 2008 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்காவில் இவருக்கு லட்சக்கணக்கான ரசிகர்களின் ஆதரவு இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-3)

## ஈராக்கின் மொசூல் நகர்மீது அமெ.படைகள் தாக்குதல்!

மொசூல்,நவ.18

ஈராக்கின் மூன்றாவது முக்கிய நகரமான மொசூலில் அமெரிக்கக் கூட்டுப்படையினர் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக பலூஜா நகரில் கிளர்ச்சியாளர்கள் அதிகமோனோர் பதுங்கியிருக்கின்றனர் என அந்நகரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தில் பெரும் தாக்குதலை அமெரிக்கப் படையினர் மேற்கொண்டிருந்தனர்.

இத்தாக்குதல் சம்பவங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பொதுமக்களும் அடங்குவர்.

இந்நிலையிலேயே ஆயிரக்கணக்கான அமெரிக்கச் சிப்பாய்கள் பெரும் தாக்குதலை மொசூல நகரின் மீது மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்கப் போர் விமானங்களும் ஹெலிக் கொப்படர்களும் நகரின் மீது குண்டு மழை பொழிந்து வருகின்றன. குண்டுவெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் நகருக்குள் கேட்டவண்ணமுள்ளன.

அத்தோடு, மொசூல் நகரின் தென்பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தின் மீது ரொக்கெட் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

கிளர்ச்சியாளர்கள் இரண்டு பொலீஸ் நிலையங்களைக் குண்டு வைத்து தகாத்துள்ளனர். சம்பவ இடத்திற்கு அமெரிக்கப் படையினர் செல்லமுன் கிளர்ச்சியாளர்கள் தப்பித்துச் சென்றுவிட்டனர் என அமெரிக்கத் தரப்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளர்ச்சியாளர்கள் கடந்த வாரம் கைப்பற்றிய பொலீஸ் நிலையங்களை மீட்பதற்காகவும் அமெரிக்கப் படையினர் அப்பகுதியில் முன்னேறி வருகின்றனர்.

யாரும் வெளியேறாதபடி நகரின் முக்கிய ஐந்து பாலங்களையும் அமெரிக்கப் படையினர் அடைத்துள்ளனர்.

மேற்படி தாக்குதல் காரணமாக பொதுமகள் பலர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். (க-3)

## ஆதாரம் இருந்ததாலேயே சங்கராச்சாரியாரை கைது செய்ததாக தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை,நவ.18

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் காஞ்புரம் வரதராஜ பெருமாள் கோயில் நிர்வாகி கொலை சதியில் தொடர்புபட்டுள்ளார் என்பதற்கான ஆதாரம் இருந்ததாலேயே அவரைக் கைது செய்தோம் என தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்களும் இடம்பெற்றுள்ளன. சென்னை உச்ச நீதி மன்றத்தில் ஜெயேந்திரரின் பிணை மனு விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜெயேந்திர சுவாமிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை வெளியிட்டு இருந்தார்.

அந்தக்குற்றச்சாட்டுக்களும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, மேலும் பல்வேறு தகவல்களும் அவ்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

சங்கரராமன் கொலை செய்யப்படுவதற்கு முன்னரும், கொலை செய்யப்பட்ட பின்னரும் அவரது வீட்டில் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையிலேயே ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டார் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சங்கரராமன் வீட்டில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் மூலம் அவரது கொலையில் ஜெயேந்திரர் தொடர்புபட்டுள்ளார் என்பது உறுதியாகத் தெரிவதாகவும் மத்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ள தமது அறிக்கையில் தமிழக அரசு கூறியுள்ளது.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு. எனவேதான் ஜெயேந்திரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என தமிழக அரசுசார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் சொன்னார்.

ஜெயேந்திரர் கைது குறித்துக் கருத்துத் தெரிவிக்க இந்தியக் காங்கிரஸ்கட்சித் தலைவி சோனியா காந்தி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் நீதிமன்ற விசாரணையில் உள்ளது. எனவே தான் இது குறித்து எவ்வி கருத்தும் தெரிவிக்க முடியாது என்றார்.

காஞ்சி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் தனிமனித உரிமை மீறப்பட்டுள்ளது என மத்திய முன்னாள் அமைச்சரும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப்பாளருமான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

காஞ்சி ஜெயேந்திரர் மீதான பிணைமனு விசாரணை நேற்று மீண்டும் சென்னை உச்ச நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

## இந்தியப் பிரதமரின் விஜயத்துக்கு முன்னர் காஷ்மீரின் ஸ்ரீநகர்ப் பகுதியில் தாக்குதல்

காஷ்மீர்,நவ.18

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் காஷ்மீருக்கான தனது விஜயத்தை மேற்கொள்ள சில மணிநேரங்களே இருந்த வேளையில் அப்பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

காஷ்மீரின் புற நகர்ப் பகுதியிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பிரதமர் மன்மோகன சிங் காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்றுப் பொதுக கூட்டம் ஒன்றில் உரையாற்றியுள்ளார். இந்த நிகழ்வுக்குப் பிரதமர் செல்லவிருந்த ஒரு சில மணிநேரங்களின் முன்னரே இத்தாக்குதல் சமபவம் இடம்பெற்றது எனப் பொலீஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலை அடுத்து ஸ்ரீநகர் பகுதியில பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை,

இந்தியா - பாகிஸ்தானுடனான நீண்டகால நெருக்கடியைத் தளர்த்தும் முக்கிய நடவடிக்கையாக காஷ்மீரிலிருந்து தமது துருப்புக்களில் ஒரு பகுதியை இந்தியா வாபஸ் பெற்றுள்ளது.

இந்தியக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காஷ்மீரின் இராணுவத் தளபதி கூறுகையில்:-

பிரிவினைவாதிகளின் வன்முறைகள் குறைந்து எல்லைப்புற வாயிலாக பாகிஸ்தானில் நிலைகொண்ட கிளர்ச்சியாளர்கள் ஊடுருவுவது குறைந்திருக்கிறது. இதனையடுத்து இந்திய அரசின் பணிப்பின் பேரில் மேற்படி படைக்குறைப்பு இடம்பெறுகிறது - என்றார்.

அணு ஆயுதத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே காஷ்மீர் விவகாரம் நீண்டகாலம் தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-3)



# UNIVERSITY OF JAFFNA

**Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE) Project**
**Post of Secretary (On Contract)**
**Local Technical Secretariat**

Applications are invited from suitably qualified persons for the above post for the Local Technical Secretariat of the IRQUE Project, University of Jaffna funded by the World Bank. The assignment is on a full time basis and for a period of 12 months. However the assignment is renewable. The ideal condidate should have the following qualifications.

- G.C.E. (O/L) Examination in 6 subjects at not more than 2 sittings with credit passes in 3 subjects including English.
- The candidate is required to demonstrate Office Management and Public Relations skills. He/She should possess excellent computer applications skills and be fluent in English. Skills in report Writing, maintaining accounts, letter writing and handling e-mail communications are other skills expected.
- Preference will be given to those with experience in **Project related work and in coordinating programmes.**

An appropriate remuneration in keeping with qualification will be paid. Interested candidates are requested to submit the self prepared applications, Curriculum Vitae and the name of 2 referees with contact details including Telephone numbers.

Closing date for application: 30/11/2004

***Please address applications to:***
**Mrs.A.Sivaneswaran,**
**Deputy Director / Administration**
**Local Technical Secretariat (LTS)**
**IRQUE Project,**
**University of Jaffna.**

IRQUE Project Deputy Director / Administration

(C/39101) (24)



# கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினரும்,
முன்னாள் தலைவருமான

**அ.இராசையா (ஐயாத்துரை)**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல்கூறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மனோன்மணி சனசமூக நிலையத்தினர்,**
நந்தாவில் அம்மன் கோயிலடி, கொக்குவில்.

(38712)(34-14-19)



# மரண அறிவித்தல்

## செல்வி நவமணி சபாரட்ணம்



கொழும்பைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான செல்வி நவமணிதேவி சபாரட்ணம் 16.11.2004 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் துயில்கொண்டு விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - இராசமணி அவர்களின் அன்பு மகளும் சறோயினிதேவி, கணேஸ்வரி, சுதந்திரதேவி, காலஞ்சென்ற ஜெகநாதன், புவனேந்திரன், இரங்கநாதன், சியாமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரட்ணவரதன், காலஞ்சென்ற சந்திரசேகரன், மகேந்திரன், ஸ்ரீஸ்கந்தராஜா, இரஞ்சினி, ரட்ணவதனி, பாக்கியதேவி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (18.11.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இடம்பெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

**45, விவேகானந்தா, கில்,**
**கொழும்பு -13.**

தகவல்:
சகோதரர்கள்.

(38714)(39-34-14-19)


# மாவீரர் வார நிகழ்வுகள்

மாவீரர் தினத்தை முன்னிட்டு இணுவில் கலாஜோதி சனசமூக நிலையம் நடத்தும் நாடகப்போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)

* * *

தென்மராட்சி,நவ.18

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்க எல்லைக்குள் வாழும் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கென சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் தமது ஒரு நாள் கொடுப்பனவை வழங்கியதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8-202)

* * *

யாழ்ப்பாணம்,நவ.18

மாங்குளம் பிரதேசத்தில் மாவீரர் தினம், மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு, கரும்புலி லெப்.கேணல் போர்க் நினைவுதினம் மற்றும் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் ஆகியவற்றை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு மாங்குளம் எழுச்சிப் பேரவை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தேசியத் தலைவரின் பிறந்த தினமான எதிர்வரும் 26 ஆம் திகதி மாங்குளம் சந்தியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் 50 பானைகளில் வைக்கப்படவுள்ள பொங்கல் ஏ-9 வீதியால் செல்லும் பயணிகளுக்கு வழங்கப்படவுள்ளதுடன் இனிப்பு வகைகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கரும்புலி போர்க் நினைவுதினமான எதிர்வரும் 23 ஆம் திகதி மாங்குளத்தில் அமைந்துள்ள போர்க்கின் சிலைக்கு முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி மாங்குளம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். (8-88-202)

* * *

வலி.தென்மேற்கு,நவ.18

மாவீரர் தினத்தை முன்னிட்டு சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்க அங்கத்தவர்களாகவும், சங்கப் பணியாளர்களாகவும் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குச் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவீரர்களின் பெற்றோர்கள் பற்றிய விவரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு சங்கப் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (8-202)

* * *

மாவீரர் தினத்தை முன்னிட்டு எழுவைதீவு பிரதேசத்தை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எழுவைதீவு அரசியல் துறைப் பொறுப்பாளர் கே.யாழினியன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் கலந்துகொள்வார். (8-16)

* * *

நவாலி,நவ.18

மாவீரர் தினத்தை முன்னிட்டு சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த சுமார் 50 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு மைல் நீளமுடைய மழை வெள்ளம் ஓடும் வாய்க்காலையே இச்சிரமதானப் பணி மூலம் புனரமைத்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் மழை நாள்களில் வெள்ளம வீடுகளுக்குள் செல்வதால் மக்கள் பெரும் சிரமததை எதிர்கொண்டனர். இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இந்த இளைஞர்கள் வீதியோரத்தில் மிகவும் ஆழமாக வெட்டி வாய்க்கால் அமைத்து வருகின்றனர். (8-100-202)

* * *

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை வலயத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையிலும் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையத்திலும் எதிர்வரும் 24ஆம் திகதி புதனகிழமை சுதுமலை யுவசக்தி சனசமூக நிலையததிலும் 25ஆம் திகதி வியாழக்கிழமை சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்திலும் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (8-100-202)

* * *

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தமது பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இந்த நிகழ்வு மானிப்பாய் ப.நோ.கூ.சங்க மண்டபத்தில நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.(8-12)

# பொது நிகழ்வுகளில்...



ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தின் ஆண்டுநிறைவு அறக்கொடை விழாவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் செல்வன் எஸ். இதயதீபனுக்கு மாதாந்த உதவுதொகைப் பணத்தை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)*




கியூடெக் நிறுவனம் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், மண்வெட்டிகள் மற்றும் தெளிகருவி ஆகியவற்றை வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு.அ.ப.அன்ரனிப்பிள்ளை அடிகளார் இவற்றை வழங்குவதையும் சங்கத் தலைவர் அ.யோ.இமானுவேல், செயலாளர் என்.மரியநாயகம் மற்றும் சங்கப் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: வலி.தென்மேற்கு செய்தியாளர்)*



பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையம் நடத்திய சிறந்த பண்ணையாளர் போட்டியில் மாடு வளர்ப்பில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பி.சிவரூபனுக்கு கரவெட்டி அரசினர் கால்நடை வைத்தியநிலைய வைத்திய அதிகாரி திருமதி எம்.சறோஜினி பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். சுவாமி சித்ருபானந்தாவும் படத்தில் உள்ளார்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



பண்ணாகம் மாதர் சங்கத்தில், யாழ். மாவட்ட தொழிற்றுறைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மட்கலப் பயிற்சியை ஆரம்பித்து வைத்த உதவிப் பிரதேச செயலர் ய.பரந்தாமன் செய்முறையில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் சி.ராகவன், சங்கானை அரச மட்கலப் போதனாசிரியர்கள் அ.திருச்செல்வம், எஸ்.தவராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: சங்கானைச் செய்தியாளர்)*

உதயன்

## கேள்வியும் அவரே; பதிலும் அவரே!

நேற்றுமுன்தினம் அரச தொலைக்காட்சியில் விசேட பேட்டி நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவித்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது தொடர்பாக புலிகளைப் பார்த்து கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றார்.

"இந்த மாத இறுதிக்குள் அமைதிப் பேச்சை ஆரம்பிக்க நீங்கள் (விடுதலைப் புலிகள்) தயாரா?" - என்று நேரடியாகக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் அவர்.

இந்தக் கேள்விக்கு ஊடகங்கள் எல்லாம் முக்கியத்துவம் கொடுத்து அதனைப் பிரசாரப்படுத்தியிருக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஜனாதிபதியின் அந்தப் பேட்டி நிகழ்ச்சியில் - அவரது கருத்திலேயே - தமக்குப் புரிந்தும் புரியாமலேயே - அவர் தமது கேள்விக்கு அவரே பதிலும் தந்திருக்கின்றார் என்பதுதான்.

"என்னுடைய (ஜனாதிபதி) பதவிக்காலம் இன்னும் இரண்டு வருடங்களில் நிறைவடைந்து விடும். அதனால், என்னுடன் பேசிப் பயனில்லை என்று புலிகள் கூறுகின்றார்கள்.

"அதிகாரத்தில் யார் இருந்தாலும் இனப்பிரச்சினை தொடர்பாக அரசின் நிலைப்பாடு மாறாது. எதிர்காலத்தில் நான் அரசுத் தலைவராக இல்லாவிட்டால், புதிய தலைவர் அந்தப் பொறுப்பை முன்னெடுப்பார். ஆகவே, புலிகள் அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை." - என்று ஜனாதிபதி குமாரதுங்க கூறியிருக்கின்றார்.

இதைத்தான் தமிழர் தரப்பும் இன்று கேட்கிறது.

ஜனாதிபதி குமாரதுங்க இப்படித் தாம் தெரிவித்த கருத்தை, உடனடியாக அப்படியே நடைமுறைப்படுத்துவார் என்றால் - இந்த மாதத்துக்குள் அல்ல, நாளையே அமைதிப் பேச்சுகள் தொடங்கிவிடும் என்பதுதான் யதார்த்தம்.

தற்போதைய அமைதி முயற்சிகளைத் தென்னிலங்கைத் தரப்பில் ஆரம்பித்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அல்லர். இதற்கு முந்திய ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் அதை ஆரம்பித்தார்.

அவர் தொடங்கிய அமைதி முயற்சிகளை, அவரை அடுத்து அரசுத் தலைமையைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்திருந்தால் - ரணில் விட்ட இடத்திலிருந்து சந்திரிகா விடயத்தை ஆரம்பித்திருந்தால் - சமாதான முயற்சிகள் இப்போது நம்பிக்கை தரும் தொலைதூரத்துக்கு நகர்ந்திருக்கும். அதுதான் நடக்கவில்லையே!

கடந்த ஆண்டு ஒக்ரோபர் கடைசியில் - இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான தமது வரைவைத் தமிழீழ விடுதலைப் புலிகள், அப்போதைய ஐ.தே.மு.அரசின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்தனர். அதைப் பெற்றுக்கொண்ட அரசு, அந்த வரைவை அடிப்படையாக வைத்துக்கொண்டு நேரடிப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்கத் தயார் என்று நவம்பர் முற்பகுதியில் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அந்த அறிவிப்பு வந்த கையோடு அந்த அரசின் முக்கிய அமைச்சுக்களைத் தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்திப் பிடுங்கினார் ஜனாதிபதி குமாரதுங்க. அதன் பின்னர் அந்த அரசை, அதே நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் கலைத்ததும், சிங்களப் பேரினவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்து அரசைக் கைப்பற்றி அவர் ஆட்சி அமைத்ததும் தெரிந்த சங்கதிகள்.

அமைதிப் பேச்சை முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்து ரணிலின் அரசு கடந்த ஆண்டு நவம்பர் முற்பகுதியில் எடுத்த நிலைப்பாட்டை தென்னிலங்கையில் ரணிலின் அரசிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய சந்திரிகா அரசு ஏற்றுக்கொண்டு தொடருமானால் நாளையே பேச்சு ஆரம்பமாகும். அதற்குத் தடையேதும் இல்லை.

புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தின் வார்த்தைகளில் கூறுவதானால் -

புலிகள் சமாதானக் கடையைத் திறந்துவைத்து விட்டுக் காத்திருக்கிறார்கள். அரசு தான் பேரம்பேசி வியாபாரம் நடத்துவதற்கு வரவேண்டும்.

தன்னுடைய தற்போதைய அரசு சமாதான முயற்சிகள் தொடர்பாக எடுக்கும் போக்கை - செயற்பாட்டை - நடவடிக்கையை - அடுத்துவரும் அரசுத் தலைமை தொடரும் என்று உறுதிகூறும் ஜனாதிபதி குமாரதுங்க, தற்போதைய சமாதான முயற்சிகளின் நிலைப்பாட்டை அதுவிட்ட இடத்திலிருந்து தொடங்குவதற்குத் தனது அரசு தயாரா என்பதை அறிவிக்க முன்வரவேண்டும்.

அதற்கு அவர் 'ஆம்' என்றால் பேச்சு இந்த மாதத்தில் அல்ல, நாளையே ஆரம்பமாகும். 'இல்லை' என்று பதில் தருவாரானால் பேச்சுகள் இப்போதைக்கு ஆரம்பமாவது துர்லபமே.

# தென்னாசிய நாடுகளில் அமைதியை உண்டாக்குவது குறித்த 3 நாள் மாநாடு

### லாகூரில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.18

'தென்னாசிய நாடுகளில் அமைதியும் அதற்கான இணக்கப்பாடுகளும்' என்ற தலைப்பிலான மூன்று நாள் மாநாடும் செயலமர்வுகளும் பாகிஸ்தானின் லாகூர் நகரில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் பாகிஸ்தான் கிளையின் ஏற்பாட்டில் இந்த மாநாடும் செயலமர்வுகளும் நடைபெறுகின்றன.

இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்கின்றனர்.

இலங்கையில் இருந்து 10 ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வில் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் இலங்கைக் குழுவின் மூலவள ஆளணியினர்களில் ஒருவராக 'உதயன் - சஞ்சீவி' பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனும் பங்குபற்றுகின்றார். வடக்கிலிருந்து 'உதயன்' பிரதம ஆசிரியரே இம் மாநாட்டில் மூலவள ஆளணியினராகக் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்.

தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இத்தகைய மாநாடுகளும் செயலமர்வுகளும் இந்த வருடத்தில் ஏற்கனவே நேபாளம், பங்களாதேஷ், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்றுள்ளன.

இம்மாதம் ஐந்தாம் திகதிமுதல் ஏழாம் திகதிவரை இலங்கைக் கிளையின் அனுசரணையில் கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் மாநாடும் செயலமர்வும் நடைபெற்றன.

இந்தக் கொழும்பு மாநாடு மற்றும் செயலமர்வுகளிலும் 'உதயன் - சஞ்சீவி' பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் மூலவள ஆளணியினராகப் பங்குபற்றினார்.

கொழும்பு மாநாட்டில் தகவல்களைப் பெறும் உரிமை, தகவல் ஊடகங்களும் சுதந்திரமும் என்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

அத்தோடு - தென்னாசிய நாடுகளின் உள் முரண்பாடுகள் குறித்துச் செயலமர்வுகள் இரண்டு நாள்கள் நடைபெற்றன. அப்போது பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளில் நிலவும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது. இலங்கையின் இன முரண்பாடு குறித்த விரிவுரைகளும் அவற்றைத் தொடர்ந்து கருத்துக்களும் பரிமாறப்பட்டன.

மூன்று நாள் நிகழ்வுகளின் முடிவில் தெற்காசிய ஊடகவியலாளர்கள் இணைந்து நீண்ட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். (3)

### மிதிவெடி அகற்றும் பணிகள்

# பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் தவிர்ந்த பகுதிகளில் மேலும் தாமதமடையலாம்

யாழ்ப்பாணம்,நவ.18

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள தவிர்ந்த ஏனைய பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றுவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவைப்படும் என்று யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி எல்மோ ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்ற 2006ஆம் ஆண்டுவரை செல்லும்.

மக்கள் அதிகளவில் வாழ்கின்ற இடங்களில் புதைத்துவைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றுவதற்கே தற்பொழுது முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் மக்கள் குறைந்தளவு உள்ள இடங்களில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றுவதற்குத் தாமதமாகி வருகின்றது.

மிதிவெடி அகற்றிய இடங்களில் இருந்து மிதிவெடிகள் வெடித்தால் அதற்குப் பதில் சொல்லவேண்டியவர்கள் நாங்கள்தான். இதற்காகத்தான் மிக அவதானமாக ஒவ்வொரு இடங்களிலிருந்து மிதிவெடிகளை அகற்றி வருகின்றோம்.

அடுத்த மாதம் மிதிவெடி அகற்றப்படும் இடங்கள் தொடர்பாகப் புதிய திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-7)

## "விடுதலையின் ஒளி" பெருவிழா

கொழும்புத்துறை,நவ.18

நல்லூர், சென்.ஜேம்ஸ் ஆலய வாலிபர் சங்கத்தின் 'விடுதலையின் ஒளி' பெருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் சென்.ஜேம்ஸ் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி அ.ஸ்ரீபனின் பிரார்த்தனை வழிபாடும், 'நான்' உளவியல் சஞ்சிகையின் ஆசிரியர் அருட்திரு.ம.போல் நட்சத்திரம் அ.ம.தி. அடிகளாரின் அருளுரையும் இடம்பெறும்.

கலை நிகழ்வுகளாக சபையின் பங்குப் பிரிவுகள் வழங்கும் விடுதலையின் ஒளிக் கீதங்கள், கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரையின் 'ஒற்றுமையில் வேற்றுமை முடிவு ஒரு கற்பனை' என்னும் நாடகம் ஆகியனவும் இடம்பெறும். (10-30-51-202)

# நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் பெற்றோர் வீட்டுக் கல்வித்திட்டம்

யாழ்ப்பாணம்,நவ.18

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் 'றிடோ' நிறுவனம் குடாநாட்டில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிறுவனத்தின் அபிவிருத்தி முயற்சிகளில் ஒன்றாக, 'பெற்றோர் வீட்டுக் கல்வி' என்ற திட்டம் அமைந்துள்ளது. எழுத்தறிவு அற்ற பெற்றோர்களுக்கு எழுத்தறிவிப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இத்திட்டத்தில் பயனாளிகளாக உள்ள 35 பெற்றோரை ஊக்குவிக்குமுகமாக கௌரவிப்பு நிகழ்வு ஒன்று கடந்த 16ஆம் திகதி சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் 'றிடோ' நிறுவனத்தினால் நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத் திட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நோர்வே நாட்டின் அபிவிருத்தி நிதியப் பிரதிநிதிகளான வொறுநூட், காந்தவே எட்வின், நாகேந்திரம் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச உதவிப் பிரதேச செயலர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், 'றிடோ' நிறுவனத் தலைமை இணைப்பாளர் க. ஜெயசீலன், மீளாய்வுக் கண்காணிப்பு உத்தியோகத்தர் வி.பிரகலாதன் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்களுக்குப் பரிசில்களும் 'றிடோ' நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சிறப்புரையாற்றிய நோர்வே நாட்டின் திட்ட இணைப்பாளர் வொறுநூட் தெரிவிக்கையில்:

இதுவரை காலமும் மாணவர்களுக்கே கல்வித் திட்டத்தினை மேற்கொண்டு வந்தோம். இப்போது 'றிடோ' நிறுவனத்தின் ஆலோசனைக்கமையப் பெற்றோர்களுக்குக் கல்வித்திட்டம் ஒன்றினை உருவாக்கி எழுத்தறிவற்ற பெற்றோருக்கு எழுத்தறிவித்து, அவர்களை ஊக்குவிப்பதற்கு இவ்வாறான ஒரு சிறப்பான நிகழ்வை 'றீடோ' நிறுவனம் மேற்கொள்வது பாராட்டத்தக்க ஒன்றாகும். இன்றைய கால கட்டத்தில் இவ்வாறான ஒரு நிகழ்வு இடம்பெற்றமை சமுதாயத்திற்கு மிகவும் பயனுள்ளதே.

பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பொருள்கள் தற்போதைய காலநிலைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கு எம்மால் வழங்கப்படுகின்ற நிதி, நோர்வேயில் ஒருநாள் உழைப்பின்மூலம் சேகரிக்கப்பட்டதாகும் - என்றார்.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் மற்றும் 'றிடோ' நிறுவன அலுவலர்கள், நோர்வே நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலர் உரையாற்றினார்கள். (8)

### உதயவாக்கு

வருவதைக் கண்டு மயங்காதே,
போவதைக் கண்டு கலங்காதே.

### நாளை

கார்த்திகை 04
வெள்ளிக்கிழமை
(19.11.2004)
திதி: அட்டமி
பின்னிரவு 3.23 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 10.10 வரை
சுபநேரம் : 6.09 - 7.39
ராகுகாலம் : 10.39 - 12.09
(பழைய நேரப்படி)

### சுற்றுச் சூழல் மாசுபடுவதால்

# மீன் பதனிடும் நிலையத்தை அகற்றுமாறு கோரிக்கை

வடமராட்சி,நவ.18

பருத்தித்துறை நகரப் பகுதியில் விநாயகர் முதலியார் தெருவில் ஐயனார் வீதியும் ஆத்தியடி ஒழுங்கையும் சந்திக்கும் இடத்தில் இயங்கிவரும் மீன் பதனிடும் நிலையத்தினால் சுற்றுச் சூழலில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவி வருவதால் அதனை வேறு இடத்துக்கு மாற்றுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மீன் பதனிடும் நிலையத்தைச் சுற்றியுள்ள இடங்களில் வாழும் 50 குடும்பங்கள், பருத்தித்துறை நகர சபைச் செயலாளர், பருத்தித்துறைப் பிரதேச செயலர், பருத்தித்துறைச் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு இக் கோரிக்கை கொண்ட கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளன.

இந்நிலையம், மீன்களுக்கு ஐஸ் இட்டு பெட்டிகளில் அடைத்து வெளியிடங்களுக்கு அனுப்பிவருகிறது. சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட இத்தொழில் தற்போது பெரிதாக விரிவடைந்துவிட்டது. ஆயினும், இதனால் சூழல் மாசடைவதையும் அருகில் வசிக்கும் குடும்பங்கள் பெரும் பாதிப்புக்கு இலக்காகி வருவதையும் இந்நிலையத்தினர் கவனத்திற்கொள்ளவில்லை.

மீன்களைப் பெட்டிகளில் அடைக்கும் போது வெளியேற்றப்படும் கழிவுநீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. நுளம்புத் தொல்லைகள் அதிகரிக்கின்றன. இதன் காரணமாக நாளடைவில் நிலத்தடி நீர் (கிணறு) மாசுபட வாய்ப்புள்ளது.

இந்நிலையத்தால் வீசப்படும் மீன் எச்சங்கள் காகங்களினால் எடுத்துச் செல்லப்பட்டுக் கிணறுகளுக்குள் போடப்படுவதால் குடிதண்ணீர் மாசடைகின்றது.

எனவே, இந்நிலையத்தை மக்கள் குடியிருப்பு அற்ற ஓரிடத்திற்கு மாற்றுமாறு அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையின் பிரதிகள் யாழ். அரச அதிபர், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக்கழக சூழல் பாதுகாப்புப் பிரிவு, யாழ். நகர அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (8-173)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வகை வகையான சாடிகள், குறோட்டன் பாம்ஸ், செவ்வரத்தை என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப் பாணம். T.P.: 222 6363. (38645)

LML Vespa Pulse 75CC புதிய ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 29, கொழும்புத் துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 222 3685. (38691)

எம்மிடம் பாவித்த டிஷ் அன்ரனா (றிசீவர்) (KTV கார்டுடன்) வீடியோ டெக்குகள், எலக் ரோனிக்பொருள்கள் பலதும் விறபனைக்குண்டு. தொடர்பு: எஸ்.சுரேஷ்குமார், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (காங்கேசன்துறை வீதி யில்). T.P.: 021 - 4590413. (38693)

### உடன் விற்பனைக்கு

முதிரைப் பலகையினாலான பிற்றிங், அலுமாரி கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: கபிலா காலணியகம்,
4,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (38699)

## சேவை

55,000 அமெரிக்க நிரந்தர குடியேற்ற விசா (Green Card) விண்ணப்ப விவரம் இல வசமாகப் பெற Internet மூலம் USA இறகு அனுப்பி Receipt பெற நாடுங்கள். PENG UIN B2/F23, Bloemendhal, colombo-13 T.P.: 2438367, 077 3081764. (சி-38978)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

9 மாதம் நிரம்பிய Great Dane ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, ராஜா வீதி, கல்வியங்காடு. (38713)

# அரசாங்க கேள்வி மீள் அறிவித்தல்

சுகாதாரச் சேவைகள் பிரிவு, யாழ்ப்பாணம்
சலவைச்சேவை - 2005

2004-09-15ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்திற்கு கவனம் கோரப்படுகின்றது. விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட வைத்திய சாலைகளுக்கு 2005ஆம் ஆண்டுக்கான சலவைச்சேவை செய்வதற் கான மள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் சீல்வைக்கப்பட்ட உறைகளில் இட்டு, கேள்வி விவரம் எழுதப்பட்டு, இதற்கென வைக் கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

☆ கேள்விப்படிவப் பணம்: 50/=
☆ கேள்விப்படிவம் விநியோகிக்கும் காலம்:
2004-12-02ஆம் திகதி வியாழக்கிழமை 15.00 மணிவரை
☆ கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி:
2004-12-03 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணி வரை.
☆ கேள்விகள் திறக்கப்படும் நேரம்: 2004-12-03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி.

*மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.*

வைத்திய கலாநிதி **இ.தெய்வேந்திரன்,**
மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம். (சி-390861)(26-14-44)

# முதலாம் ஆண்டு நினைவுகளுடன்....

மலர்வு 13 - 02 - 1963



உதிர்வு 30 - 11 - 2003

## செல்வி
## விஜயராஜா கமலாஜினி
## (றதி)

ஆண்டொன்றும் ஆயிற்றோ - எம்
ஆருயிர்ச் செல்வமே! றதி!!
உனைப் பிரிந்து!
அன்பினால் அரவணைத்து
அனைவருக்கும் அருமருந்தாய்
நின்னினிய வார்த்தைகளால்
எங்களைக் கவர்ந்து நின்ற
செல்வமே! கமலாஜினி!
எம்முயிர் இருக்குமட்டும்
ஏந்துவோம் உம் நினைவை!

இன்று (18.11.2004) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஓராண்டு நினைவு நிகழ்வு களிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளாத்தியடி றோட்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

*பிரிவால் வருந்தி நிற்கும்:*
**மா.விஜயராஜா குடும்பத்தினர்.** (சி-39096)(34-14-44-26)

# மாணவர்களிடையே சித்திர, நாடகப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு,நவ.18

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண மாவட்டக் கிளையினரால் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களி டையே சித்திரம் மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பான சித்திரப்போட்டிகள் இம் மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்குக் கொக்கு வில் இந்துக்கல்லூரி யில் நடைபெறும் என செஞ்சிலுவைச் சங்க இணைப்பாளர் அறிவித்துள்ளார். (8-153)

# நீதித்துறையின் மீது ஜனாதிபதி குற்றஞ்சாட்டியது ஓர் இழுக்கு!

## கடுமையாகச் சாடுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,நவ.18

நீதித்துறை மீது ஜனாதிபதி குற்றஞ் சாட்டியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கே ஏற்பட்ட ஓர் இழுக்கு. அவரது செயல் கண்ட னத்துக்குரியது.

- இப்படிக் கூறுகிறார் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் இது பற்றிக் கூறியதா வது:-

2000 ஆம் ஆண்டிலும் அவர் இப்படியொரு குற்றத்தைச் சுமத்தினார்.

நீதியரசர் ஒருவர் லஞ்சம் வாங்கினார் என்று அப்போது அவர் கூறினார்.

ஜனாதிபதியின் இந்தக் குற்றச்சாட்டுக்கு விளக்கம் கோரி அப்போது தலைமை நீதியர சராக இருந்தவர், ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்துக்கு எவ் வித பதிலும் ஜனாதிபதியிடமிருந்து கிடைக்க வில்லை. மீண்டும் ஒரு கடிதத்தை அவர் ஜனாதிபதிக்கு எழுதினார். இதுவரைக்கும் ஜனா திபதியிடமிருந்து அந்தக் கடிதத்துக்கும் எந் தப் பதிலும் அனுப்பப்படவில்லை.

நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 26 வருடங்களாகச் சட்டபீட மாணவர்களுக்குக் கற்பித்தவன் என்ற வகையில் ஜனாதிபதியின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நீதித்துறையில் தனிநபர்களின் செயற்பாடு களை வைத்து முழு நீதித்துறையையுமே குற்றஞ்சுமத்த முடியாது. ஜனாதிபதி என்பவர் பொறுப்புடன் பேசப் பழகிக்கொள்ள வேண்டும் - என்றார் அவர். (க-8)

# கொரிய தொழில்நுட்பவியலாளர்கள் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை

யாழ்ப்பாணம்,நவ.18

கொரிய நாட்டு தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆறுபேர் கொண்ட குழு இன்று யாழ். தொழி ல்நுட்பக் கல்லூரிக்கு வருகைதரவுள்ள தாகக் கல்லூரியின் அதிபர் என். யோகராஜன் தெரிவித்தார்.

இன்று காலை 10 மணிக்கு வருகை தரவுள்ள இக்குழுவினர், இங்கு 10 நாள்கள் தங்கிநின்று தொழில்நுட்பக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடங்களிற் கான வரைபடத்தினைப் பார்வையிடுவதுடன் அதற்கான ஆலோசனைகளை வழங்கியும் புதிய திட்டங்களையும் வகுக்கவுள்ளனர்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்திற்கான நிதியுத வியினையும் புதியதாகப் பொருத்தப்படவுள்ள இயந் திர சாதனங்களுக்கான நிதியினையும் கொரியா வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-13)

## கோழிக்குஞ்சு விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.18

அச்சுவேலிப் பண்ணையில் உற்பத்தி செய யப்பட்ட ஒருநாள் பேட்டுக் குஞ்சுகளும், சேவல குஞ்சுகளும் கோண்டாவில் ஸ்ரேசன் றோட் டில் அமைந்துள்ள கால்நடைத் திணைக்களத் தில் வைத்து நாளை வெள்ளிக்கிழமை விநி யோகிக்கப்படவுள்ளதாகக் கால்நடைத் திணைக் கள வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (8-202)

## ஆண்டிறுதிப் பரீட்சை

தாவடி,நவ.18

வலிகாமம் கல்வி வலயத்தின் வலய மட்ட ஆண்டிறுதிப் பரீட்சைகளில் தரம் 3, 4, 5, 6, 7, 8, 10 என்பவற்றிற்கான நேர அட்டவணை அதி பர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வினாப்பத்திரங்களைக் கோட்டக் கல்வி அலு வலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தரம் 6, 7, 8, 10 என்பவற்றிற்கு நவம்பர் 29 ஆம் திகதிமுதல் டிசெம்பர் 4 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறும். தரம் 3, 4, 5 என்ப வற்றிற்கான பரீட்சைகள் டிசெம்பர் முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதிவரை நடைபெறும. (8-149)

## இலக்கியத் தேர்வில் பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம்,நவ.18

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் நடத்திய இவ்வாண்டுக்குரிய உயர் இலக்கியத் தேர்வுகளில் பரிசு பெறுபவர்களின் பெயர், விவரங்கள் வெளியாகியுள்ளன.

'தமிழும் சங்க இலக்கியங்களும்' என்னும் ஆய்வுக்கட்டுரைக்கு புத்தளம் யோசேவ் வாஸ மாவத்தை, கோயில் வீதியைச் சேர்ந்த ஜெசிக்கா தவஞானமும், 'பூண்க நின்தேரே' என் னும் இலக்கிய நாடக ஆக்கத்துக்கு கொக்கு வில், கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதி யைச் சேர்ந்த திருமதி ஜெ.கந்தவேளும் ஈழத் துப் பூதந்தேவனார் நான்மணி மாலை' என் னும் சிறுபிரபந்த ஆக்கத்துக்கு தர்க்கா நகர், றிபாயா மன்சிலைச் சேர்ந்த ஆ.இக்பாலும் பரி சில்களைப் பெறுகின்றனர்.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள தொல்காப்பிய மாநாட்டில் வைத்து வழங்கப்படும் என்று கழகத்தின் செயலாளர் தெரிவித்துள் ளார். (8-202)

## நாலரைக் கோடி ரூபா அதிர்ஷ்டம்

கொழும்பு,நவ.18

இலங்கையின் லொத்தர் வரலாற்றில் ஆகக கூடிய பரிசுத் தொகையாகக் கருதப்படும் நாலரைக் கோடி ரூபாவுக்குரிய மஹாஜன சம்பத லொத்தர் சீட்டு அவிஸாவெல பிர தேசத்தின் லொத்தர் முகவர் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக லொத்தர் சபை தெரிவித் துள்ளது. கடந்தவாரம் அதிர்ஷ்டம் பார்க்கப் பட்ட மஹாஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பி லேயே இந்தப் பெருந்தொகை பரிசாகக் கிடைத்துள்ளது. (ஐ)


**LOG - R. கமல்**
**2005 - PAPER CLASS பகுதி II**
**2006 - குறியீட்டு அளவையியல்**
ஆரம்பம்: 19-11-2004 3p.m. (S.L.T.)
**திகழ் கல்வி நிறுவனம்**
K.K.S. வீதி, இணுவில். (38709)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## சபாரட்ணம் அதிதரன்

B.A. (Hons), M.A. (Eco.)

எம்முடன் பட்டதாரி பயிலுநராகப் பயிற்சிபெறும் *சபாரட்ணம் அதிதரன்* அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியற்றுறையில் முதுகலைமாணி (M.A.) பட்டம் பெற்றதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பட்டதாரி பயிலுநர்கள்,
**தீவக வலயம் (2ஆம் பிரிவு).**

(38708) (26-14-44)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிந்தாமணி செல்லம்மா

சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிந்தாமணி செல்லம்மா காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிந்தாமணி அவர்களின் அன்பு மனைவி யும் சிவானந்தமலர், புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேசன் (சுன்னாகம்) அவர்களின் அன்புச் சிறிய தாயாரும் விக்னேஸ்வரன், காலஞ்சென்ற தங்கம்மா மகேசன், காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் மாமியாரும் யமுனா, ஐங்கரன் ஆகியோரின் பேர்த்தியாரும் சுதர்சினியின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-11-2004 செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்ன வரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கோகுலம்',
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
N.விக்னேஸ்வரன் (மருமகன்).
(38710) (26-14-44)

## அந்தோனிப்பிள்ளை இராயப்பு (ராசு)



புலோலி தெற்கு, சாரையடியைப் பிறப்பிட மாகவும் தவசிகுளம், மிருசுவிலை வதிவிட மாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இராயப்பு (ராசு - மேசன் ஒப்பந்தகாரர்) 15.11.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந் தோனிப்பிள்ளை - கதறீனாவின் அன்பு மகனும் றோசம்மா (செல்வராணி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சூசைப் பிள்ளை, செபஸ்தியாம்பிள்ளை மற்றும் பிரகாசி, சீமான்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), மரியம்மா ஆகியோரின் அன்புச் சகோத ரனும் அன்ரன் செல்வரட்ணம் (ஜேர்மனி), மேரிகில்டா (பிரான்ஸ்), யோண்சன் ஜெயரட்ணம் (லண்டன்), மேரிநிமல்டா, யூட்டிஷயன் ஜீவரட்ணம், மேரி மெற்றில்டா, கலிஸ்ரஸ் விஜயரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மட்டீனா (ஜேர்மனி), யோசப் அன்ரனி (பிரான்ஸ்), மேரிமெக்டலின் (லண்டன்), சுரேந்திரன் ஆகி யோரின் அன்பு மாமனாரும் கெவின், ஆர்னிக்கா, ஜெனீனா, ஜெனி பர், ஜெசிக்கா, ஜெரமின் ஆகியோரின் அன்புப் பேரனும் அரு ளானந்தம் (கொழும்பு), திமதிராஜா, குணம், முத்துராஜா, இந்திரா, செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.11.2004) வியாழக்கிழமை மாலை மூன்று மணிக்கு தவசிகுளம் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தவசிகுளம்,*
*மிருசுவில்.*
T.P.:0777917827

தகவல்:
இ.ஜீவரட்ணம் (மகன்).
(38683) (43-14-44-26)

# சைவத்தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் சேர் பொன். இராமநாதன்

இன்று சேர் பொன். இராமநாதனின் குருபூசைத் தினம். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

எவனொருவன் திரிகரணங்களும் தூய்மையாகச் செயற்படுகின்றானோ, அவன் இறைநிலையாளன். அவனது வாக்கு மந்திரமாகும். அவனது செயல் சிவப்பணியாகும். சேர் பொன். இராமநாதன் திரிகரண சுத்தியுடன் வாழ்ந்தவர். இறைநிலையடைந்தவர். சாதாரண மக்களால் சாதிக்கமுடியாதவற்றை ஒரு தனிமனிதனாக நின்று சாதித்த பெருமைக்குரியவர்.

இந்தவகையில் சேர் பொன். இராமநாதன் தான் வாழ்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளார். அவரது பணிகளைக் கல்வி, அரசியல், சமூகம், சமயம், பொருளாதாரம், கலை கலாசாரம் என்று பாகுபடுத்தலாம். இவற்றுளெல்லாம் உன்னதமான பணியாக இருப்பது சைவத்தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சியே. அவர் வாழ்ந்த காலத்தின் தேவைக்கேற்ற பணியாக அது அமைந்துவிட்டது. இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த யாழ்ப்பாணம் இராமநாதன் பெண்கள் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வரன் ஆலயம், பொன்னம்பலவாணேச்சரர் ஆலயம், சைவமங்கையர் சபை, சைவ பரிபாலன சபை, சைவாசிரியர் கலாசாலை, சைவச்சிறுவர் பாடசாலைகள் என்பனவாகும்.

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் நம் நாட்டில் வேரூன்றிவிட்டது. மதமாற்றமே குறிக்கோளாகக் கொண்டு மிசனரிமார் மக்களுக்குக் கல்வி புகட்டினர். பெண் கலவிக்கு முக்கியத்துவம் அளித்தனர். ஏட்டையும் பெண்கள் தொடுவதில்லை என்ற ஒரு சாராரையும், மதம் மாறிக் கல்வி கற்கும் ஒரு சாராரையும் சேர் பொன். இராமநாதன் கண்டார்; மனம் புழுங்கினார். நாவலர் கையாண்ட நெறியையே இராமநாதனும் பின்பற்றினார்.

அவரது வாரிசாக சேர் பொன். இராமநாதன் செயற்பட்டார். அஞ்சா நெஞ்சமும், தற்துணிவும் கொண்ட இராமநாதனின் இலட்சியம் நிறைவேறியது. பெண் கல்வியில் வியத்தகு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். ஓர் ஆணுக்குக் கொடுக்கும் கல்வியிலும் ஒரு பெண்ணுக்கு அளிக்கப்படும் கல்வி, சமூகத்தை மட்டுமல்ல, நாட்டையும் வாழவைக்கும் என நம்பினார்.

சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் 1913ஆம் ஆண்டு இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவினார். இது இலங்கையின் முதற்பெண்கள் கல்லூரி என்னும் பெருமைக்குரியதாகும். 50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த இக்கல்லூரி, பாரிய கட்டட அமைப்புக்களைக் கொண்டதும், கலை நுணுககம் வாய்ந்ததும், ஆசிரியரும் மாணவருமுடனிருந்து கல்வி கற்கும் வசதியினை உடையதும், வழிபாட்டிற்கென அமைந்த நடராசர் ஆலயத்தையும், சரஸ்வதி மண்டபத்தையும் உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றது. இது கலாசாரப் பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாக அமைந்துள்ளது.

இக்கல்லூரிக்குத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைத் தெரிவுசெய்து கற்பிக்க நியமித்தார். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் சைவத்தமிழ்ப் பண்பாட்டுடன் கூடியவர்களாக உருவாக்கப்பட்டனர். ஆரம்ப காலத்தில் கட்டுப்பாடு - ஒழுங்குமுறைகளை, தானே முன்னின்று நடத்தினார். குருகுலக் கல்வி முறையில் பயிலும் மாணவர்கள் சைவ உணவை உண்டு சைவாசாரத்துடன் மிளிர்ந்தனர். தமிழர் பண்பாடு பேணும்வகையில் மாணவர்கள் நீண்ட பாவாடை சட்டையும், தாவணியும் அணிந்தனர். கூந்தலைப் பின்னிக் குஞ்சங் கட்டினர். மாணவர்களுக்கு இசைப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. எல்லாவகையிலும் இவர்கள் இராமநாதன் கல்லூரி மாணவர்கள் என்று இனங்காணப்பட்டனர். மாணவர்கள் கல்வி கற்றலோடு நில்லாது, கோலம் போடுதல், மாலை கட்டுதல், தையல் தைத்தல் போன்ற செயற்பாடுகளில் பயற்சி பெற்றனர். இதற்கென அமைத்த பூந்தோட்டத்தில் மலர் கொய்து மாலைகட்டி காலை, மாலை வேளைகளில் வழிபாடு செய்தனர். வழிபாட்டின்போது இராமநாதன் அவர்களால் தெரிவுசெய்த பாடல்களையே பாடினர்.


பெண் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது போல சைவசமய மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தினார்.

கொழும்பு மாநகரை அணிசெய்து நிற்பது

**பண்டிதை வை.கணேசபிள்ளை**

சேர் பொன். இராமநாதனால் கட்டப்பட்ட பொன்னம்பலவாணேச்சரம் ஆகும். இது சைவப் பணபாட்டு விழுமியங்களைத் தாங்கி நிற்கின்றது. திராவிட சிற்ப முறையைத் தழுவி, முழுதும் கருங்கற்பொழிவினால் ஆக்கப்பெற்றது. இந்த ஆலயத்தை இவரது தந்தையார் 1836இல் ஆரம்பித்து வைத்தார். இதனைக் கற்றளியாக்கிய பெருமை இராமநாதனையே சாரும். பாரிய அளவிலான இவ்வாலயத்தை ஒரு தனிமனிதனாக நின்று கட்டுவித்தார்.

பல்வேறுபட்ட பணிகளுக்கிடையேயும் இராமநாதன் ஆத்ம ஞானத்தை உடையவராகவும், பற்றற்ற ஞானியாகவும் விளங்கினார். அருட்பரானந்த சுவாமிகளைக் குருவாகப் பெற்றார்.



குருவருளால் திருவருள் பெற்ற சேர் பொன். இராமநாதன் அவர்கள் எண்பது ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்து, 1930ஆம் ஆண்டு கார்த்திகை திருவோணத்தில் சமாதி அடைந்தார். அவரது பூதவுடல் சமாதி ஆக்கப்பட்டு, லிங்க பிரதிட்டை செய்யப்பட்டுப் பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இன்று அவரது (18.11.2004) குருபூசைத் தினமாதலால் விசேட வழிபாடுகள் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பழைய மாணவர்களால் நடத்தப்படுகின்றன. ✣

# அடிப்படை வசதிகள் எதுவுமேயின்றி இயங்கும் முல்லைத்தீவுக் கல்வி வலயம்

**செய்திக் கட்டுரை**

**ந.விக்கினேஸ்வரன்**

முல்லைத்தீவுக் கல்வி வலயம் பல்வேறு இன்னல்களுடன் இயங்கிவருகின்றது. புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டம் 1998ஆம் ஆண்டில் அரசினால் கொண்டுவரப்பட்டது. அதன்பின் உருவான புதிய வலயக் கல்விப் பணிமனை நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து இன்றுவரை வலயக் கல்விப் பணிமனை நிர்வாக ஆளணியிலும் சரி, பாடசாலைகளின் ஆளணியிலும் சரி மிகமோசமான பற்றாக்குறை இருந்துவருகிறது.

இலங்கையில் உள்ள 92 வலயங்களில் மிகவும் பின் தங்கியதும், ஒதுக்கப்பட்டதுமாகக் கடந்த இரு தசாப்தகாலமாக இது இருந்து வருகின்றது.

மர நிழல்களிலும் ஓலைக் குடில்களிலும் கல்வி வளர்கிறது. மிகமோசமான ஆசிரியர் பற்றாக்குறை பாடசாலைப் பிள்ளைகளின் பாடவிதானச் செயற்பாட்டினைப் பின்தள்ளியுள்ளது.

இடம்பெயர்வுகளைச் சந்தித்த இவ்வலயம் தன்னால் தாங்கிக்கொள்ளமுடியாத இரண்டு, மூன்று மடங்கான மாணவத் தொகையும் பல வகுப்புகளையும் தாங்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி இந்த வலயத்திற்கு 918 ஆசிரியர்கள் தேவையாகும். ஆனால், இவ்வலயத்தில் உள்ள ஆசிரியர் தொகை 600 ஆகும். இந்நிலையில் கல்விசார் நடவடிக்கைகளை அமுல்படுத்துவது முடியாத காரியமாகும்.

இந்த நவீனயுகம் எதைவேண்டி நிற்கின்றதோ அத்தேவையை நிறைவு செய்யமுடியாமல் அல்லற்படுகிறது. முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் பாடரீதியாக ஆசிரியர்கள் இல்லை. உதாரணமாக, ஆங்கில பாடம் கற்பிக்க 98 ஆசிரியர்கள் இருக்கவேண்டிய இடத்தில் 13 பேர் மட்டும் உள்ளனர்.

கணனிகள் சில பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டாலும் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை, மின்சாரம் இல்லை. பழைய மாணவர்கள் நலன்விரும்பிகளால் மின்பிறப்பாக்கிகள் பெறப்பட்டாலும் எரிபொருள் இல்லை. கணனிக் கல்வியினைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. மாணவர்களின் தேடலினை வழிகாட்ட வழிகாட்டிகள் இல்லை.

இப்பிரதேசத்தில் அதிக நூல்கள் உள்ள நூலகம் இல்லை. பாடசாலைகளில் இருக்கும் நூலகங்கள் மாணவர்களின் தேடலுக்கு உகந்ததாகப் புனரமைக்கப்படவில்லை.

இலத்திரனியல் தொழில்நுட்ப சாதானங்களில் ஊடகக் கல்வி நவீன மயப்பட்டும் அவை எதுவும் எட்டாக்கனியாக இவ்வலயப் பாடசாலை மாணவர்களுக்கு உள்ளது. நாளுக்கு நாள் கல்வி அறிவியல் வளர்ந்து வானத்தினைத் தொடும் நிலையில் இம்மாணவர்கள் குறிப்புப் புத்தகமும், வெண்கட்டியும், கரும் பலகையும் கொண்டே கல்வி கற்கிறார்கள்.

இவை மட்டுமன்றி, வலயக் கல்விப் பணிமனை நிர்வாகத்தில், கல்வி நிர்வாக சேவையினைச் சேர்ந்தவர்களாக வலயக் கல்விப் பணிப்பாளரும் வேறு ஒரு சிலருமே உள்ளனர். அதனால், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்களாக இலங்கை அதிபர்சேவை Iஐயும், IIஐயும் சேர்ந்தவர்களே கடமையாற்றுகிறார்கள்.

1ஏபி, 1சி பாடசாலைகளுக்கு அதிபர்களாக இருக்கவேண்டிய இவர்கள் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் தமது கடமைகளைத் தொடர்கின்றனர்.

இவற்றைத் தவிர, கணக்காளர், நிதி உதவியாளர், நிர்வாக உத்தியோகத்தர் (மீள் நியமனத்தில் உள்ளனர்), பிரதம எழுதுநர், எந்திரி ஆகிய பதவிகள் நீண்டகாலமாகவே நிரப்பப்படாத நிலையில் உள்ளன. இவர்களுக்குரிய கடமைகளைச் சாதாரண எழுதுநர் சேவையில் உள்ளவர்களும் எந்திரிக்காகத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் நிறைவேற்றுகிறார்கள்.

ஆனால், வேறுசில வலயங்களில் தேவைக்கு அதிகமாக வலய ஆளணியிருப்பதும் பாடசாலை ஆசிரியர் ஆளணியிருப்பதும் மிகவும் வேதனையான விடயம் என முல்லைத்தீவு வலய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பௌதீக வளங்களில் பொதுக்கல்வி நிகழ்ச்சி செயற்றிட்டம் IIஇன் கீழும், 'நிகொட்', 'காப்' போன்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியூட்டலிலும், 'யுனிசெவ்' போன்ற பன்நாட்டுத் தொண்டர் நிறுவனத்தின் உதவியுடனும் கணிசமான விருத்தியை இக்கல்வி வலயம் கண்டுள்ளது.

ஆய்வுகூட வசதிகள் சில பாடசாலைகளில் மட்டும் காணப்படுகிறது. இதனால், மாணவர்கள் பரிசோதனைகளைச் செய்வதிலும், செயற்பாட்டுரீதியாகக் கற்றலை மேற்கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து பாடசாலை ஒன்றில் இயங்கிவரும் வலயக்கல்விப் பணிமனை தனக்கென நிலையான கட்டடத் தொகுதி முல்லைத்தீவு நகரில் இருந்தும் அதனை திருத்தச் செப்பனிடப் போதிய நிதி வளம் இல்லாமல் இருந்தது. இப்போது அவை ஓரளவு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

எனினும், நாளாந்தம் ஆசிரியர்கள், திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர் படும் அவலநிலை மிகவும் பரிதாபத்துக்குரியது.

இவற்றினை எல்லாம் அறிந்து உரியவர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் இக்கல்வி வலயத்தை முன்னேற்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் கல்விச் சமூகம் கேட்டு நிற்கிறது. ✳

# தமிழர்கள் பிரிந்துவாழ விரும்புவது ஏன் என்பதை ஆராய்ந்து பார்க்கக்கூட சிங்களவர் தயாரில்லை!

**விசனம் தெரிவிக்கிறார் கலாநிதி குமார் ரூபசிங்க**

கொழும்பு,நவ.18

தமிழர்கள் சிங்களவர்களிடமிருந்து விவாகரத்துக் கோருகிறார்கள். ஒருமித்து வாழ விருப்பமில்லாமல் அவர்கள் விவாகரத்துக் கோருவதில் நியாயம் இருக்கிறது. தமிழர்கள் ஏன் பிரிந்து வாழ விரும்புகிறார்கள் என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்குக்கூட சிங்களத் தலைமைகள் முன்வராதிருப்பது வருந்தத்தக்கது.

- இப்படி விசனப்படுகின்றார் சகவாழ்வு நிலையத்துக்கான பணிப்பாளர் கலாநிதி குமார் ரூபசிங்க.

கடந்த 14ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 'சமாதானத்தின் தேக்கநிலையும் அதனை வெற்றிகொள்வதற்கான மார்க்கங்களும்' என்ற தொனியில் ஆய்வரங்கொன்றை இனங்களுக்கிடையிலான சமாதானத்துக்கான ஆய்வகம் ஒழுங்குசெய்திருந்தது. இந்த ஆய்வரங்கில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய குமார் ரூபசிங்க அங்கு மேலும் கூறியதாவது:-

இரண்டு வெவ்வேறு நோக்கங்களை வைத்துக்கொண்டு பேச்சுகளை நடத்தமுடியாது.

சமாதான பேச்சுகள் ஆரம்பமானதற்குக் காரணமே இராணுவ சமநிலையை அடிப்படையாக வைத்து ஏற்பட்ட நிலைமைதான்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்துகிறோம் என்று கூறிக்கொண்டே மறுபக்கம் அரசு தன்னைப் பலமாக்கிக்கொள்ளத் திட்டமிட்டது; விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கும் கைங்கரியத்தில் ஈடுபடத் தொடங்கியது.

இதை வெளிப்படையாகக் குறிப்பிடுவதானால், கிழக்கில் விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்து சென்ற கருணா குழுவினருக்கு அடைக்கலம் கொடுத்துப் புலிகளைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயத்தைக் காட்டலாம். அது தோல்வியில் முடிவுற்றது.

பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்பது ஒரு பெரிய விடயம் அல்ல. ஜனாதிபதிக்கு அரசமைப்பில் இருக்கும் பலம்வாய்ந்த அதிகாரத்தை வைத்து அதைச் செய்யமுடியும். ஆனால், அதை அம்மையார் செய்ய முன்வரமாட்டார்.

மூன்றாவது முறையாகவும் தான் எப்படி அரசின் தலைமைப் பொறுப்பை வகிப்பது என்ற நோக்கத்துடன் அவர் அதற்கான திட்டங்களையே தீட்டிக் காய் நகர்த்துகின்றார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பெரும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவர்கள் முன்வைத்துள்ள யோசனைகளில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் இருக்கலாம். உலகில் தனிநாட்டுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் கெரில்லா இயக்கங்களில் சுமார் இருபது இயக்கங்களுடன் சமாதானப் பேச்சுகளில் நான் ஈடுபட்டிருக்கிறேன். கெரில்லா இயக்கங்கள் அதி உச்ச கோரிக்கைகளைத் தான் முன்வைக்கும்.

அதை அடிப்படையாகக் கொண்டு பேச்சுகளை ஆரம்பிக்கும் பட்சத்தில் சில நெகிழ்ச்சிப் போக்குகளைக் காணலாம்.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்கூட தாம் முன்வைத்த யோசனைகளில் சில நெகிழ்ச்சிப் போக்குகள் பற்றி ஆராய்ந்து பார்க்கலாம் எனக் கூறியுள்ளார்.

தமிழர்கள் தங்களின் ஆயுதப் போராட்டத்தின்போது பல தவறுகளை இழைத்திருக்கிறார்கள். தமக்குள் மோதிக்கொண்டமை, தமிழ்ப் போராளிகள், தமது பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை ஒரு பொருட்டாகக் கருதாமல் விட்டமை போன்றவை இதில் அடங்கும்.

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு மணித்தியாலங்களில் அவர்களை வெளியேறுமாறு பணித்தனர். நடந்த பேச்சுகளிலும் முஸ்லிம் மக்களின் பிரச்சினை பற்றிக் கவனத்தில் கொள்ளாதமையும் கவனிக்கத்தக்கது. குறிப்பாக, முஸ்லிம்களின் பிரச்சினை பற்றிக் கவனத்தில் கொள்ளாதது பெரும் தவறு என்றே தோன்றுகின்றது.

காத்தான்குடி, ஏறாவூர் சம்பவங்கள் முஸ்லிம்களைத் தூர விலகிச்செல்ல வழிகோலியது. முஸ்லிம்களின் லட்சக்கணக்கான ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டமை போன்ற விடயங்கள் தவறானவை - இப்படி அவர் தனதுரையில் கூறினார். (சு-8)

**Dr.(Miss) C.V.Selliah and Ms Grace Bunker**
**Invite You to join them in**

**A Service Of Thanks giving**
In memory of their fathers
***DR.SYDNEY K.BUNKER***
AND
***MR.K.A.SELLIAH***
in celebration of their
**100th Birth Anniversary**
on
November20, 2004
at 3.30 p.m.
The JDCSI Cathedral,
Vaddukoddai

(சி-39064)(39-16-45-42)


## மிருசுவிலில் மருத்துவ முகாம்

தென்மராட்சி, நவ.18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மிருசுவில் பகுதி மக்களுக்கான இலவச பரிசோதனை முகாமினை எதிர்வரும் 21 ஆம் திகதி மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

கண், இரத்த அமுக்கம், நீரிழிவு, பெண் நோயியல், தொழு, வாய்ப்புற்று பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

மிருசுவில் தெற்கு, மிருசுவில் வடக்கு, படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், எழுதுமட்டுவாழ் வடக்கு, தவசிகுளம், உசன், போக்கட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இப் பரிசோதனையில் கலந்துகொள்ளலாமென கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-117)

## 700 குடும்பங்களுக்கு சமைத்த உணவு

தென்மராட்சி, நவ.18

பளைப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து கடந்த இரண்டு வருடங்களாக மீளக் குடியமர்ந்த மக்கள் அமர்ந்த கொட்டில்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல கொட்டில்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

மாசார், சோரன்பற்று, இயக்கச்சி, முகாவில், கோவில்வயல், சங்கத்தார் வயல், புதுக்காடு, புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, கச்சார்வெளி, வண்ணான் கேணி ஆகிய இடங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. (ஐ-117)

## நூலகத்திற்கு கணனி நூல்கள்

தென்மராட்சி,நவ.18

தென்மராட்சிப் பிரதேச மாணவர்களுக்கு கணனி அறிவை வளர்ப்பதற்காக கணனியியற் புத்தகங்கள் நுணாவில் கிழக்கு சர்வசாதனா சனசமூக நிலையத்திற்கு வழங்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜின் அனுசரணையுடன் 'றொபேக்' நிறுவனத்தினர் நுணாவில் கிழக்கைச் சேர்ந்த அமரர் மாணிக்கம் நினைவாக இப்புத்தகங்களை வழங்கவுள்ளனர்.

சனசமூக நிலையத்தில் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி பி.ப. 3மணிக்கு நிலையத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் ஊ.வெற்றிவேலுவும் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம், பிரதேச சபைச் செயலாளர் குருபாலச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-117)





போற்றுவார் போற்றட்டும்!
தூற்றுவார் தூற்றட்டும்!!

இணையற்ற சேவையினூடு
இமாலய சாதனை
32 வருடங்கள்
உயர்ந்து நிற்கும்
நிறுவனத்தின்

புதிய கல்வி ஆண்டிற்கான
புதிய அனுமதிகள்

நவ.20 முதல் டிச.10 வரை
மட்டுமே வழங்கப்படும்.

**The Express Institute**
Irupalai, Kopay.
அதிபர்

(C/39048)



## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
18.01.1926

விண்ணில்
18.11.2000

அமரர்
**பொன்னம்பலம் தர்மலிங்கம்**

"என்றும் உங்கள் நினைவுடன் வாழும்"

85/3(39/1)ஏ.வி.றோட்,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.

(38637)(39-16-45-42)



உ
சிவமயம்

## 15ஆம் ஆண்டு நினைவலைகள்....

மலர்வு
15 - 02 - 1910



உதிர்வு
04 - 12 - 1989

அமரர் **கிருஷ்ணபிள்ளை சுந்தரம்பிள்ளை**
(செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பு)
திதி : கார்த்திகை வளர்பிறை ஷஷ்டி

"வையத்துள் வாழ்வு ஆங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
-திருக்குறள்

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.
(38068)(39-16-45-42)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



## 9ஆம் ஆண்டு நெஞ்சில் நீங்கா நினைவினில்

அன்னை
மடியில்
09 - 08 - 1972



ஆண்டவன்
அடியில்
29 - 10 - 1995

**செல்வன் வீரகத்தி ஜெயரூபன் (ரூபன்)**
திதி:18.11.2004

ஆலமர விருட்சம் போல் ஒளி தருவாய்
என்றிருந்தோம்
ஆறாத துயரத்தில் ஆழ்த்திவிட்டுச்
சென்று விட்டாய்
பரமன் நினைத்திருந்தால் பாதியிலே
பறிக்காமல் விட்டிருப்பார்
அதைத்தான் நினைக்க மறந்துவிட்டார்.
உன்னை என்றும் எம் நினைவுகளில்
பதித்து நிற்போம்.

சிவன்கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

(38596)(39-16-45-42)



## 11ஆவது பிறந்ததின வாழ்த்து



18.11.2004

கரணவாய் மத்தியைச் சேர்ந்தவர்களான
திரு.சிவலிங்கம் திருமதி உமாராணி
தம்பதிகளின் செல்வப்புதல்வன்

**குருபரன்**

அவர்கள் இன்று (18.11.2004) வியாழக்கிழமை தனது பதினோராவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

குருபரனை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, பப்பன்மாமா, மாமி, ஜெயாச்சித்தி, ஆனந்த சித்தப்பா, செல்வா சித்தி, ரவிச் சித்தப்பா, அஜந்தன், நிஷாந், அகில் நிவானந்தன், யனார்த்தா அண்ணாமாரும் யீவிதா அக்கா, யனுகுத்தா, கமலகுமார், ஹரிராம் தம்பிமாரும் நிவாஜினி தங்கை, கௌசி கார்த்திகா மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மூத்தவிநாயகர் அருளால் சீருஞ்சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

குருபரன் தொலைத் தொடர்பகம்.
கரணவாய் மத்தி.
கரவெட்டி.

- அப்பா சிவலிங்கம்.
T.P.: 021 2263606

(38599)(42-16-45-42)



## 20ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
16 - 07 - 1938



உதிர்வு
18 - 11 - 1984

அமரர் **அ.க.சிவசுப்பிரமணியம் (சிவம்)**
(உரிமையாளர் - அம்புலி போட்டோ, நல்லூர்)

தாளாத வேதனையில் எம்மைத்
தவிக்க விட்டுப் போனீர்களே - அப்பா!
சொந்தம் எல்லாம் கைவிட்டுச்
சொர்க்கலோகம் சென்றீர்களோ - அப்பா?
செங்குருதி செங்கம்பளமாகச் சென்றீர்களே அப்பா!
சென்ற இடம் தெரியாமல் தேடுகின்றோம் - அப்பா
யாரோடு சொல்லி அழுவோம் இந்த வேதனையை?
இருபது வருடங்கள் சென்றும் உங்கள்
நினைவால்-நாம் வாடுகின்றோம்.!

"அம்புலி போட்டோ"
410, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(38678)(39-16-45-42)

உங்கள் பிரிவால் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்.

# அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு முழுமை பெறுமா?

உலக சனத்தொகையில் பெண்களின் வீதம் அதிகமாகக் காணப்படுகின்றது. இவர்களது வளங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவகையில் முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இவர்களின் வளங்களை முழுமையாகப் பெற்று அபிவிருத்தியை மேற்கொள்ளவேண்டுமானால், பெண்களுக்கான உரிமைகள் முற்றுமுழுதாக அவர்களைச் சென்றடைய வேண்டும். அவர்கள் தங்கள் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க வேண்டும். இதற்கமையவே பெண்களுக்கான அடிப்படை உரிமைகள் சாசனங்களாக வெளியிடப்பட்டு வருகின்றன.

பேச்சுச் சுதந்திரம், தேர்ந்தெடுக்கும் உரிமை, வாக்களிக்கும் உரிமை என நீண்டு செல்லும் இத்தகைய உரிமைகளை எவ்வளவு பெண்கள் யதார்த்தத்தில் அனுபவிக்கிறார்கள் என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

### சமூகத்தில் பெண்கள்

பெண் பிறக்கும்போது சுதந்திரமாகத்தான் பிறக்கிறாள். பின் அவளை வளர்க்கும் போதுதான் ஒவ்வொரு வகையான கட்டுப்பாடுகளுக்குள்ளாகிறாள்.

தாய், மகள், சித்தி, மனைவி என்ற பாத்திரங்களுக்குள் கட்டுப்பட்டு பாசம், அன்புக்கு இலக்கணமானவள் என்று வரையறுக்கப்பட்டு பொறுமைசாலியாகப் பூசிக்கப்பட வேண்டியவள் என்ற கோட்பாடு திணிக்கப்படுகிறது.

இந்நிலைமை தாய் வழியாக, தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு பால் ரீதியான வேறுபாடு விதைக்கப்படுகிறது.

ஆண் தலைவன், ஆணுக்குக்கீழ்தான் பெண் அடங்கி வாழவேண்டும், ஆண் வீரமுடையவன் பெண் கொடியிடையாள், பூமாதேவியானவள் பொறுத்துப்போவாள் என்கிற வறட்டு வேதாந்தங்களுக்குட்பட்டு, தாமே தமது ஆசைகளை, உணர்வுகளைப் பூட்டி வைத்து வளர்கக - வளர வைக்கப்படுகிறாள்.

இந்நிலைமை ஆணாதிக்கம் மேலோங்கக் காரணமாகியதுடன், ஆண்களை எவ்வகையிலும் மிஞ்சிவிடக் கூடாதென்கிற, பாரபட்சத்திற்கும் இட்டுச் சென்றது. இத்தகைய பால் ரீதியான வேறுபாடானது, பெண்ணினது ஆளுமைகளையும், தன்னம்பிக்கையையும் சிதைத்து, போகப் பொருளாக மாறியது.

### பெண்கள் மீதான வன்முறைகள்

இன்றைய நாளாந்தச் செய்திகள் பெண்கள் மீதான வன்முறைகளைத் தாங்கி வருகின்றன. அடக்கப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கும் இப்பெண் மாமியார் கொடுமை, கணவனின் கொடுமை, போக்குவரத்தில் துன்புறுத்தல் என நாளாந்தம் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகின்றாள்.

தாயாக, மனைவியாக, சகோதரியாக அனுசரித்து ஏற்றுப் போவதுதான், அடக்கப்படுவதற்கும் இத்தகைய துன்புறத்தல்கள் தொடர்வதற்கும் ஏதுவாகின்றன. இவையாவற்றையும் மீறி ஒரு பெண் துணிந்து வெற்றிபெறுகிறாள் என்கிற போதுகூட, அவளுக்கான வாழ்த்துக்கள் இன்றி வெறுப்பும், தூற்றலுமே பரிசாகக் கிடைக்கின்றன.

### தற்காலத்தில் பெண்கள்

இன்று பெண்கள் நுழையாத துறைகளே இல்லை எனலாம். இவ்வாறு பல துறைகளிற்குள் நுழைந்தபோதும் முழுமையான மாற்றம் என்று சொல்வதற்கில்லை. இவர்கள் தமக்கான உரிமைகள் என்ன என்பதைப் புரிந்து கொளவதன் மூலமே தமது எதிர் காலங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளமுடியும்.

நாட்டின் மொத்தசனத்தொகையில் 52வீதம் பெண்களாவர். இவர்கள் பொருளாதாரத்துக்காக 95வீதம் உழைக்கின்றபோதும், தாம் அனுபவிப்பது வெறும் 5வீதமானவையே.

இதற்குக் காரணம் பால் ரீதியான வேறுபாடு அன்றி வேறில்லை. சமயங்கள் ஆண்களும், பெண்களும் சமமானவர்கள் எனப் போதிக்கின்ற போதிலும் சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் பாரபட்சம் காட்டப்படுவது ஏன்?

### பெண்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்

பெண்கள் தமது உரிமைகள் என்னவென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்த உரிமைகளைப் பல்வேறு மட்டங்களிலும் உணரவைக்கப்படவேண்டும். அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்குமுரிய பெண்களை உருவாக்க ஊக்குவிக்க வேண்டும். இச்செயற்றிட்டத்தை பல்வேறு மட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும், கிராம மட்டங்களில் பெண்கள் விழிப்புணர்வு பெற நிறுவனங்கள் சார்ந்த, அறிவுசார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

பெரியளவில் பயன்தருகின்ற செயற்பாடுகளை குழுக்களாகவோ, தனியாளாகவோ, முன்னெடுக்கும் போதுதான்; வெவ்வேறு புதிய சிந்தனைகள் விதைக்கப்படும். இச்சிந்தனைப் புரட்சி மூலம் ஒவ்வொரு பெண்ணையும் விழிப்புணர்வு பெற வைக்கவேண்டும்.

இதன்மூலமே, வீட்டினதும் நாட்டினதும் அபிவிருத்தி மேம்படும். பெண்களும் தமது உரிமைகளுடன் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வார்கள்; பிறரையும் வாழவைப்பார்கள். ☆

**மதியழகி**






## சந்தியாவின் கடிதங்கள்



*பிரியமுள்ள பிரியாவிற்கு,*

என் கருத்துக்களும் சிலவேளைகளில் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருக்கலாம். அப்படி நான்விடும் தவறுகளை நீயும் உன் நண்பிகளும் எனக்குச் சுட்டிக்காட்டினால்தானே என்னை நான் திருத்திக்கொள்ளமுடியும். எனவே என்குறை. தவறுகளை எனக்கு எழுது.

மனித உறவுகளைப் பலப்படுத்தும் ஒரு முக்கிய கருவி 'மனந்திறந்து பேசுதல்.' முக்கியமாகக் கணவன் - மனைவி. நண்பர்கள் ஆகியோரிடம் இருக்கவேண்டிய கட்டாய நற்பண்பு இதுவாகும்.

பிறரை நாம் மதிப்பதும். மரியாதை செய்வதும் வாய்வார்த்தைகளால் மட்டும் வெளிப்படாது நமது முகம். உடல் அசைவுகள் என்பவற்றாலும் தெளிவுபடுத்த வேண்டும்.

ஒரு காலத்தில் இங்கிலாந்துப் பிரதமராக 'டிஸ்ரேலி' என்னும் யுத இனத்தவர் பதவி வகித்தார். இவர் சுயஸ்கால்வாய் கம்பனியில் பங்குகள் வாங்க முடிவு செய்து அது தொடர்பாகப் பார்லிமெண்டில் அறிவித்தார். இதற்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கிரைட்ஸ்டன் எதிர்ப்புத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் "சுயஸ்பகுதி யு,தர்களும் குரங்குகளும்தான் வாழலாயக்கானது. எனவே. இதை நான் எதிர்க்கின்றேன்" என்று தெரிவித்தார்.

"அப்படியானால் நீரும் நானும் சேர்ந்தாப்போல அங்கே போகலாமே" என்றார் டிரேஸ்ட்லி.

'கெளரவம்' என்பது நான் ஒருவருக்கு எப்படிக் கொடுக்கின்றேனோ. அதேபோலவே எனக்குக் கிடைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் சமீபத்தில் எமக்கு ஏற்பட்ட மனஸ்தாபங்கள் பற்றிச் சிந்திப்போமானால் அவற்றில் 90 சதவிகிதம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாமையும் மனம்விட்டுப் பேசாமையுமே காரணமாக அமையும்.

உறவுகளைப் பலப்படுத்தும் இன்னுமொரு காரணி 'துணை நிற்கும் நட்பு'

பிரச்சினைகள் வரும்போது நாம் ஒருவருக்கொருவர் ஆதரவு தரவேண்டும். நம் கணவனுக்கோ - மனைவிக்கோ. நண்பருக்கோ அல்லது வேறு உறவினர்களுக்கோ இக்கட்டான சமயங்கள் ஏற்படும். அந்தச் சமயங்களில் நாம் தயங்காது உதவிசெய்ய வேண்டும். அந்த உதவியே என்றும் அன்புப்பிணைப்புக்கு வழிவகுக்கும்.

நாம் உதவி செய்யாத பட்சத்தில் 'அற்ற குளத்து அறுநீர்ப்பறவைபோல' நம் உறவுகளும் நம்மைவிட்டு விலகிவிடும். எனவே. நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டும்.

நம்மால் உதவமுடியாதபோது உதவி தேவைப்படுபவர்களைக் குறைகூறாமலாவது இருக்கவேண்டும். எனது நண்பி ஒருத்தி கூறிய சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. அவள் கூறினாள்:

"சாந்தி எனது உறவுக்காரி நெடுநாளைய நண்பி. எனக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டாலும் உடனே அவளிடம் போய் சொல்வேன். அவள் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு என்னையே கண்டிப்பாள். என்னால்தான் கஷ்டம் ஏற்பட்டதாகவும் சாடுவாள். நான் மனமுடைந்து திரும்புவேன். நெடுநாள்களின் பின்தான் எனக்கு ஞானம் ஏற்பட்டது. சாந்தி என் புண்பட்ட மனதுக்குச் சாந்தியைத் தரவில்லை. அவள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சப் பழகிக் கொண்டவள் என்பதை உணர்ந்தேன். இப்போதெல்லாம் என் கஷ்டத்தை அவளிடம் சொல்வதில்லை" என்றாள்.

நம்மால் ஆதரவு காட்டமுடியாதபோது - உதவி செய்ய சக்தியில்லாதபோது குறைந்த பட்சம் குறை கூறாமலாவது இருக்கவேண்டும். இது நம் உறவுகளை குலைக்காது பலப்படுத்த உதவும்.

எனவே. பிரியா நானும் முடிந்தவரை என் உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டே வாழ்கிறேன். நீயும் அப்படியே வாழ்வாய் என்று நம்பி விடைபெறுகின்றேன்.

18-11-2004

பிரியமுடன் சந்தியா.

## புதுயுகம் படைத்திடு!

அடுக்கடுக்காய்....
அராஜகங்கள்.....
அஞ்சவைக்கும்
விதப்புரைகள்
அடுக்களைக்குள்
பொம்மையாய்
அன்றாடம்
அடிமைபோல்
உன்வாழ்வு....?
பெண்ணே!
புயலாய் எழுந்து
பூகம்பமாய் கிளம்பு
பூட்டிய விலங்கினை
உடைத்து....
புதுயுகமொன்று
சமைத்திடு....
புதைத்திட்ட
சமுதாயத்தின்
புரையோடிப்போன
வட்டத்திற்குள்
நீயொரு.......
சிம்ம சொர்ப்பனமாய்...

- சு.ஞானசேகரியாரா.





## பெண் மொழிகள்

❑ உறையினுள் மறைந்திருக்கும் கூரிய வாள் போன்று பெண்களின் உள்ளத்தில் தைரியமும் ஆற்றலும் ஒளிந்துள்ளன.

❑ அழகும், பண்பும் திறமையும் குறைவாக இருந்தாலும் மனம் அறிந்து நடக்கத் தெரிந்த பெண்கள் வெற்றி பெறுகிறார்கள்.

❑ பெண்களின் குறைபாடுகள் பலவற்றிற்கு ஆண்களே காரணம்; ஆண்களின் மேலான குணங்களுக்கும் பெண்களே காரணம்.

❑ பெண் என்பவள் வளர்ச்சிக்கு வேண்டிய அகப்பண்புகளைப் பேணும் இயற்கைச் செல்வமாவாள்.

❑ பெண்கள் என்றவுடன் மிகப்பரவலாகக் கிடைக்கும் பரிசுகள் இரக்கமொழிகள்தான்.

❑ ஆண் படித்தால் ஒருவன்தான் படித்தவனாகின்றான். பெண் படித்தால் ஒரு குடும்பத்தையே படிக்க வைத்ததிற்குச் சமனாகும்.

❑ காற்றைவிடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்.

❑ பெண் ஒருத்தி தன் மரியாதைக்குச் சவால்விடவேண்டுமே தவிர, பிறருடைய கருணைக்காக கரையக்கூடாது.

சுவைத்தவை.....

- கங்கா.

# பெண்களுக்குரிய உரிமைகள்

இலங்கைப் பெண்கள் பற்றிய பிரகடனம் இலங்கைப் பெண்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் காட்டி நிற்கின்ற அரச அறிக்கையாக இருப்பதோடு, ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான எல்லா வேற்றுமைகளையும் இல்லாதொழிப்பதைப் பற்றிய சீடோ உடன்படிக்கையினை ஒட்டி வரையப்பட்டுள்ளது. இப்பிரகடனம் 1993ஆம் ஆண்டு அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிரசித்தப்படுத்தப்பட்டது.

இலங்கை அரசினால் உறுதிப்படுவதாகப் பகன்று இப்பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள உறுதியுரையின் சில விடயங்கள் திலகம் பகுதியில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவற்றின் தொடர்ச்சி பின்வருமாறு:-

**கற்பதற்கும் மற்றும் பயிற்சிகள் பெறுவதற்குமுரிய உரிமைகள்.**

✦ எல்லா கல்விச் சந்தர்ப்பங்களையும் ஆண்களும், பெண்களும் சமமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமை.

✦ பத்து வருடக் கட்டாயக்கல்வி பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்வதற்குரிய உரிமை.

✦ புலமைப்பரிசில்களில் இருந்தும் கல்வி உபகாரங்களில் இருந்தும் நன்மையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய உரிமை.

✦ ஊனமுற்றோர்கள் உள்ள குடும்பங்களின் முக்கிய பொறுப்பு பெண்களுக்குப் பொறுப்பளிக்கப்படுவதால், ஊனமுற்றோர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி பெறக்கூடிய வசதிகளை அரசின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிமை.

✦ தங்களுடைய குழந்தை கல்வி கற்க வேண்டிய மொழியைத் தெரிவு செய்யும் சம உரிமை.

**பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட மற்றும் அவற்றின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய உரிமைகள்.**

✦ நீதி சம்பந்தமான நன்மைகள் கிடைக்கக் கூடிய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய சம உரிமைகளைப் பெற்றுக் கொள்ளல்.

✦ தொழிலில் அமர்த்துதல், உரிய பதவிகளுக்கு நியமித்தல், பதவி உயர்வு, தொழில் நிபந்தனைகள் மற்றும் தொழில் பாதுகாப்பு சம்பந்தமாக சம உரிமையைப் பெறுதல்.

✦ குடியேற்றக்காணிகள் உட்பட காணி உரிமை சம்பந்தமாக எல்லா உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய சம உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்.

✦ எல்லா விதமான நவீன தொழில் நுட்பங்களும் உள்ளிடக் கூடிய உரிமை.

✦ அபிவிருத்தி அடைந்த தொழில் நுட்பம் உட்பட பொருத்தமெனக்கருதும் தொழில் நுட்பத்தின் மூலம் பயனடையும் உரிமை.

✦ திருமணம் அல்லது தாய்மை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு இழைக்கப்படும் வேற்றுமைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

✦ மகப்பேற்று விடுமுறை மற்றும் அது சம்பந்தமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளல்.

✦ தாய் தந்தை ஆகிய இருவருக்கும் பிள்ளைப்பேறு சம்பந்தமாக லீவு கொடுத்தல்.

✦ கர்ப்பிணித்தாய்மாருக்கு அல்லது கருவுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய தொழில்களில் ஈடுபடாமல் தவிர்த்துக்கொள்ளல்.

✦ தொழில் செய்யக் கூடிய ஆகக் குறைந்த வயதெல்லை 16 ஆக உறுதிப்படுத்துதல்.

✦ வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுடைய உரிமைகளை இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் பாதுகாத்தல். ☆

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை (மல்லாகம்)

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத்தொகுதிகள் என்பன 01.01.2005 தொடக்கம் 31.12.2005 வரை குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2005

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 2004.11.25 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 2004.11.30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி: 2004.12.01 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிவரை.

ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும் மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| *மல்லாகம் உப அலுவலகம்* | | | | |
| 01. அளவெட்டி மலைவேம்படி சந்தை | - | 40250.00 | 1000/- | 150/- |
| 02. மல்லாகம் பொதுச் சந்தை | - | 10500.00 | 500/- | 150/- |
| 03. இறால் மடம் சந்தை | - | 550.00 | 500/- | 150/- |
| 04. மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 300/- | 55000.00 | 1000/- | 150/- |
| 05. அளவெட்டி கருவாட்டுக் கடை இல.06 | 125/- | - | 500/- | 150/- |
| 06. அளவெட்டி கருவாட்டுக் கடை இல.07 | 125/- | - | 500/- | 150/- |
| 07. மல்லாகம் சந்தை கருவாட்டுக்கடை | 300/- | 525.00 | 500/- | 150/- |
| 08. மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 1050.00 | 500/- | 150/- |
| 09. மல்லாகம் பொதுச் சந்தைக் கடைத்தொகுதி கடைகள் இல.5 | 300/- | 25000.00 | 1000/- | 150/- |
| 10. மல்லாகம் பொதுச் சந்தைக் கடைத்தொகுதி கடைகள் இல.6 | 300/- | 25000.00 | 1000/- | 150/- |
| 11. மல்லாகம் பொதுச் சந்தைக் கடைத்தொகுதி கடைகள் இல.7 | 300/- | 25000.00 | 1000/- | 150/- |
| 12. கும்பலை மாட்டிறைச்சிக் கடை | 150/- | 10000.00 | 500/- | 150/- |
| *தெல்லிப்பழை உப அலுவலகம்* | | | | |
| 01. கூத்தன்சீமாச் சந்தை | - | 475.00 | 500/- | 150/- |
| 02. கடைத்தொகுதி கடை இல.1 | 100/- | - | 500/- | 150/- |
| 03. கடை இல.2 | 100/- | - | 500/- | 150/- |

குறிப்பு:
★ மாத வாடகைகள் யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
★ கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாதவாடகை ஆகியனவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 15% உம், மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
★ கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
★ இறைச்சிக் கடை விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பிக்க வேண்டும்.

**2. ஆதனவரி அறிவித்தல் - 2005**

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலக எல்லைக்குள் தற்போது 1964 ஆம் ஆண்டு ஆதனங்கள் மதிப்பீடு ஆண்டுப் பெறுமதியின் 3% வசூலிக்கப்படுகிறது. சபையின் நிர்வாக அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளவேண்டி இருப்பதால் அதே மதிப்பீட்டின் 10% தொகையை 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அறிவிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை வரியிறுப்பாளர்கள் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**3. படவரைஞராகப் பதிவுசெய்தல் - 2005**

2005 ஆம் ஆண்டு படவரைஞராக இச்சபையில் தம்மைப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே, எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**4. வியாபார உரிமம், அனுமதிப் பத்திரம் - 2005**

எமது பிரதேச சபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2005 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான உரிய படிவத்தினைச் சபையில் பெற்று, பூர்த்திசெய்து 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் மல்லாகம், மயிலிட்டி, தெல்லிப்பழை, காங்கேசன்துறை உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**5. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

வலி. வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எல்லைக்குள் சபையின் அனுமதியின்றி அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் போன்ற வேலைகளைச் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத்தருகின்றேன். எனவே, கட்டப்பட வேண்டிய கட்டடங்களுக்கு மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை உப அலுவலகங்களில் விநியோகிக்கப்படும் கட்டட விணணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறல்வேண்டும் என அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டடப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**6. வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை (மல்லாகம்)**
**நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவி விண்ணப்பம் கோரல்**

மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமைகளையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. பிரதேசசபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3. 18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடையவர்கள் தங்கள் சுயவிவரத்துடன் கிராம சேவகரின் சான்றிதழைப்பெற்று 24.12.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தெரிவுசெய்யப்படும் மேற்படி பதவிக்கான உத்தியோகத்தர்கள் பிணைப்பணமாக ரூபா 5000/- செலுத்துதல் வேண்டும்.

**செல்லையா செல்வரத்தினம்**
செயலாளர், வலி.வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).

வலி.வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)
16.11.2004.
(சி-39076)(34-19-44)

## 600 குடும்பங்கள் இடம்பெயர்வு

தென்மராட்சி,நவ.18

வரணி, கரம்பைக்குறிச்சிப் பகுதியில் ஏற்பட்ட மழைவெள்ளம் காரணமாக 600இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி ஆலயங்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியெங்கும் வெள்ளக்காடாகக் காட்சிதருவதாகவும், குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நேரடியாகச் சென்று இடம்பெயர்ந்துள்ள மக்களைச் சந்தித்து உரையாடி ஆறுதல் தெரிவித்தார்.
(ஐ-117)


## யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
மானிப்பாய்

**தரம் 6 அனுமதி - 2005**

2005 ஆம் ஆண்டு தரம் 6 இல் அனுமதிகோரும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாள்: 30.11.2004.
(C/39088)(42) அதிபர்.

## முக்கிய அறிவித்தல்

காரைநகர் ப.நோ.கூ.ச.கிளைக்குழுக்கள் தெரிவு

மேற்படி ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுக்கள் தெரிவு 20.11.2004 இல் நடைபெறவுள்ளது. இதன் பொருட்டு அந்தந்தக் கிளையின் தகைமை உள்ள அங்கத்தவர்களுக்குக் கடிதம் கிடைக்காவிட்டால், சங்கத்தின் செயலாளரிடமிருந்து சங்கப் பணிமனையில் கடிதத்தைப் பெறமுடியும். அப்படிக் கடிதங்களைப் பெறாவிட்டாலோ அல்லது கிடைக்காமல்விட்டாலோ கூட அந்தந்த, தங்களுக்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறுமிடத்திற்கு சமுகமளித்து கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்து கொள்ளமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

செயலாளர். காரைநகர் ப.நோ.கூ.சங்கம், காரைநகர். தலைவர்.
(C/39072)(42-34-19-44)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஓய்வுபெற்ற ஆசிரியர்
திருமதி பு.கதிர்காமநாதன அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி செல்லம்மா சிந்தாமணி**

அவர்களின் மரணச்செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (சி-39087) (26-34-19-44)

## நான்காம் ஆண்டு நினைவில்

தோற்றம் 07 - 01 - 1932



மறைவு 18 - 11 - 2000

**தம்பு இராசப்பு**

கார்த்திகை நாளில் சென்றாயோ!
கலங்கிடவே நாமெல்லாரும்
காலம் நான்கு கடந்தாலும்
கலையாது உம் நினைவு எம் மனதைவிட்டு!

"உன்பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்"
(ஏசாயா 54:13)

கார்த்திக் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (38705)(39-34-19-44)
உம் நினைவில் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஈரவிழிகளில் நான்காம் ஆண்டு

மண்ணில் முத்து 11 - 01 - 1939



விண்ணில் சொத்து 03 - 11 - 2000

**அமரர் சின்னையா முத்துக்கிருஷ்ணர்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி: ஸப்தமி 18.11.2004

வையத்துள் வந்துதித்த உத்தமருள் ஒருவர்
வித்தகப் புலமை விளையாட்டு அத்தனைக்கும் அதிபரிவர்
அன்பும் கருணையுமே தம் வாழ்வென்று இயம்பியவர்
விண்சென்று அகவை நான்கெனினும்
என்றென்றும் எம் இதயத்துள் வாழ்ந்திடுவீர்!

கணக்கர் வளவு, கந்தரோடை. (C/39075)(42-34-19-44)
நினைவுகளுடன்: குடும்பத்தினர்.

# பயணத்தைத் திட்டமிட்டு மேற்கொண்டால் விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்

## நடமாடும் சேவையில் மோட்டார் போக்குவரத்துப் பரிசோதகர் அறிவுறுத்து

வட்டக்கச்சி,நவ.18

மோட்டார் வாகனங்களில் பயணத்தை மேற்கொள்வதற்கு முன் அதனை நன்கு திட்டமிட்டுக் கொள்வதன் மூலம் வீதி விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான மோட்டார் போக்குவரத்துப் பரிசோதகர் ஆர்.ஏ.ரி.குலாஸ்.

கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் திணைக்கள நடமாடும் சேவையின் இறுதி நிகழ்வான, விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் ஆ.கந்தசாமி தலைமையில் ஆரம்பமானது.

இதில் பரிசோதகர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

மோட்டார் சைக்கிளில் செல்லுபவர்கள் தலைக்கவசம் அணிந்திருப்பதன் மூலம் உயிரிழப்பினைத் தவிர்த்துக்கொள்ள முடியும். தலைக்கவசங்களைக் கைகளில் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன், வாகனங்களைச் செலுத்தும்போது முன்னெச்சரிக்கையுடனும், மிக அவதானத்துடனும் செலுத்தவேண்டும். மனநிலையும் வாகனத்தைச் செலுத்துவதிலேயே இருத்தல் வேண்டும். வாகனத்தைச் செலுத்துவதற்கு முன் அதனைச் சரிபார்த்தல், வீதி ஒழுங்குகளைத் தெரிந்திருத்தல், அளவுக்கு அதிகமான பொருள்களை ஏற்றுவதைத் தவிர்த்தல், மது போதையில் வாகனத்தைச் செலுத்துவதைத் தவிர்த்தல் என்பவை மிகவும் முக்கியமானவை.

வாகனங்களை உடைமை மாற்றுவதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்தில் "துரித சேவை" ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கு சென்று ஒரே நாளில் வாகன் உடைமைகளை மாற்றியமைக்க முடியும். சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுத் தவறவிட்டவர்கம் இச்சேவையின் மூலம் ஒரே நாளில் மீளப்பெற முடியும்.

முகவர்கள் மூலம் போலியான சாரதி அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டு வருவதனால் முகவர்கள்மூலம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதைத் தவிர்த்து நேரடியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களங்களில் அவற்றைப் பெறவேண்டும் - என்றார்.

இக்கருத்தரங்கில் இடம்பெயர் சேவையின் போது சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோர் கலந்துகொண்டனர். இதன் முடிவில் எழுத்துப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.(8-405)

## தொடரும் கடும் மழையினால் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின

ஒட்டுசுட்டான்,நவ.18

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் வயல் நிலங்கள் யாவும் வெள்ளத்தால் மூடப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல்களும் அழிவடையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், விவசாயிகள் மீண்டும் விதைப்பதற்கான விதை நெல்லைத்தேடி அலைகின்றனர்.

அத்துடன் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் நீர் மட்டமும் உயர்ந்து காணப்படுகின்றது. முத்து ஐயன்கட்டுக்குளம் 16 அடி 2அங்குலமாகவும் தண்ணிமுறிப்புக்குளம் 18 அடி 6அங்குலமாகவும் கணுக்கேணிக்குளம் 10 அடி 3 அங்குலமாகவும் மதவளசிங்கன்குளம் 14 அடி 9அங்குலமாகவும் உடையார்கட்டுக்குளம் 21 அடி 3 அங்குலமாகவும் நிரம்பிய நிலையில் 3அங்குலம் வான்பாய்கின்றது.

விசுவமடுக்குளம் 18 அடி 4 அங்குலமான நிலையில் 4 அங்குலம் வான்பாய்கின்றது.

அத்துடன் ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி முழுவதும் நீரூடிப்பாய்கின்றது. இதனால, மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையும் காணப்படுகின்றது.

(8-203-341)

## கனகராயன் ஆற்றுப் பாலத்தின் திருத்தவேலைகள் முடிவுறும் நிலை

பரந்தன்,நவ.18

கண்டாவளை வெலிகண்டல் சந்திக்கு அருகில் இருக்கும் கனகராயன் ஆற்றுப்பாலத்தின் திருத்தவேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

இப்பாலம் கிளிநொச்சிப் பிரதேசத்திலேயே மிக நீளமான பாலமாகும். கடந்த சில காலமாக சேதமடைந்து காணப்பட்ட இப்பாலத்தின் திருத்தவேலைகள் ஒரு சில மாதங்களிற்கு முன்னரே ஆரம்பமானது.

திருத்தவேலைகள் ஆரம்பமானபோது மழை தொடர்ந்து பெய்துகொண்டிருந்தமையால் ஆற்றுக்குக் குறுக்காகப் போடப்பட்டிருந்த தற்காலிக வீதி, வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டு பரந்தன் - முல்லைத்தீவு பிரதான சாலைபோக்குவரத்துத் தடைப்பட்டது.

தற்போது வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட இரும்புச் சட்டங்களால் பொருத்தப்பட்ட பாலத்தினை வைத்து இப்பாலம் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது எனவும் - இவ்வேலைகள் விரைவில் முடிவடைந்துவிடும் என்றும் அதன்பின்னர் போக்குவரத்தை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(8-203-352)

## தமிழீழ சட்டக்கல்லூரியில் வெளிவாரிக் கற்கைநெறிகள் ஆரம்பம்

திருவையாறு,நவ.18

கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்ட தமிழீழ சட்டக்கல்லூரியின் வெளிவாரி மாணவர்களுக்கான கற்கைநெறிகள் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகின.

இவ் வெளிவாரி சட்டக் கற்கை நெறியானது மூன்றுவருட விரிவுரை வகுப்புகளையும் ஆறு மாத பயிற்சி நெறியையும் கொண்டது. பயிற்சி நெறியை முற்றுமுழுதாகப் பூர்த்திசெய்பவர்கள் தமிழீழ நீதிமன்றில் சட்டவாளராகக் கடமையாற்ற முடியும்.

இவ்வெளிவாரி கற்கைநெறிக்கு 80 மாணவர்கள் பதிவுசெய்துள்ளதுடன், அவர்களுக்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும் உள்வாரியாகப் பதிவுசெய்யப்பட்டவர்களுக்கான கற்கைநெறியும் அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (8-393)




## கிளிநொச்சிப் பகுதியில் மழையினால் நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பு

திருவையாறு,நவ.18

கடந்த சிலவாரங்களாகப் பெய்துவரும் மழையினால் கிளிநொச்சிப் பகுதியின் பல இடங்கள் நீரினால் நிரம்பி வழிவதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

திருவையாறு, இரத்தினபுரம், வட்டக்கச்சிப் பகுதிகளில் அதிகளவிலான குளங்களும் வாய்க்கால்களும் அமைந்திருப்பதனால் நுளம்பின் பெருக்கமும் தாக்கமும் அதிகமாகக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நுளம்புக்கான தடைமருந்துகள் சகல வீடுகளிலும் கிளிநொச்சி மலேரியா தடுப்பியக்கத்தால் விசிறப்பட்டபோதிலும், அளவு கடந்த நுளம்புப் பெருக்கம் சகலரையும் பீதிகொள்ள வைத்துள்ளது. மேலும், 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் வன்னியில் ஏற்பட்ட மலேரியா நோயகளின் தாக்கம்போல் இருக்குமோ எனப் பலரும் கவலையடைந்துள்ளனர்.

இரசாயன மருந்துகளுக்குப் பொருத்தமான பலன்கள் குறைவாக இருப்பதால், இனிவரும் காலங்களில் உயிரியல் முறையான கட்டுப்பாட்டையே பிரயோகிப்பது சிறந்தது என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

(8-393)

## வங்கிகள் சொந்த இடத்தில் இயங்கவில்லை

ஒட்டுசுட்டான்,நவ.18

மக்கள் மீளக் குடியமர்ந்து நான்கு வருடங்களாகியும் மாங்குளத்தில் இயங்கிவந்த மக்கள்வங்கி, இலங்கை வங்கி என்பன தமது சொந்த இடத்தில் இயங்காது மல்லாவியில் தொடர்ந்தும் இயங்கிவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வங்கிச் சேவைகளைப் பெறுவதற்காக, வங்கியின் வாடிக்கையாளர்கள் பல மைல் தூரம் சென்று சேவைகளைப் பெறவேண்டியுள்ளது. முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்தோர் அடகுச்சேவையைப் பெறுவதற்காக 30 மைல் தூரம் கடந்து வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தத்தின் பின்னர் பல நிறுவனங்கள், திணைக்களங்கள் மீண்டும் தமது சொந்த இடத்தில் இயங்கிவருகிறபோதும், வங்கிகள் வராததையிட்டு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வங்கிக்கான காணிகளில், அவற்றை மீள இயங்கவைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-204-341)

## கிளிநொச்சி துயிலும் இல்லத்தில் சிரமதானம்

வட்டக்கச்சி, நவ.18

தமிழீழ மாவீரர் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்படுகிறது.

இந்தச் சிரமதானப் பணியில் கிளிநொச்சியிலுள்ள பல்வேறு அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த 9ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (8-5-405)

## காவலரண்கள் பலப்படுத்தப்படுகின்றன

ஒட்டுசுட்டான்,நவ.18

வவுனியா, ஓமந்தைப் பகுதி கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அப்பகுதியில் தமது காவலரண்களைப் பலப்படுத்தி வருகின்றனர்.

பதுங்கு குழிகள் பலவற்றை அமைத்து அதனைப் பலப்படுத்துவதற்காக வனப்பகுதியிலுள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனால், வனவளம் அழிக்கப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமாதானச்சூழல் ஏற்பட்டுவரும் இக்காலத்தில் இராணுவத்தினரின் இந்நடவடிக்கை குறித்துப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (8-204-341)

## மழையினால் பொதுச்சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

பரந்தன்,நவ.18

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள தர்மபுரம் கிராமப் பொதுச்சந்தையில் மழைநீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி முழுவதும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வியாபாரிகள் வீசும் கழிவுப் பொருள்கள், நீருடன் கலந்து துர்நாற்றம் வீசுவதோடு தொற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(8-352-202)

## வருமுன் காப்போம் விழிப்புணர்வுச் செயற்பாடு

மாவீரர் நாளை முன்னிட்டு கடந்த 10ஆம் திகதி புளியங்குளம் பகுதியில் வருமுன் காப்போம் விழிப்புணர்வுச் செயற்பாடு தமிழீழ சுகாதார சேவையின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அனுசரணையில் நடைபெற்றது.

தொற்றுநோயில் இருந்து பாதுகாத்தல், நெருப்புக்காய்ச்சல், சுகவாழ்வு தொடர்பான கருத்தூட்டல் கிராம ரீதியாக வீடுகளில் உள்ளவர்களுக்குச் சுகாதாரக் கல்வி வழங்கியதுடன இது தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வினை வவுனியா - முல்லைத்தீவு தமிழீழ சுகாதார சேவையினர், சுகாதார தொண்டர்கள், வவுனியா வடக்குப் பொதுச் சுகாதார பரிசோதகர் தூயவன், அரச அறிவியல் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.(8-402)

## 'யோகர்சுவாமிகளும் கிளிநொச்சியும்' நூல் வெளியீட்டு விழா நாளை!

கிளிநொச்சி,நவ.18

'யோகர்சுவாமிகளும் கிளிநொச்சியும்' நூல்வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் விசேட ஆராதனைகள் இடம்பெற்று, சைவஆசாரங்களுடன் ஊர்வலமாக நூல்கள் மண்டபத்துக்கு எடுத்துவரப்படும்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

ஆசியுரைகளைத் தொடர்ந்து நூல் அறிமுகவுரையை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசும் நூல் ஆய்வுரையை சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும் நிகழ்த்துவார்கள்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து நற்சிந்தனைப் பாடல் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கலும், புதுமுறிப்பு மகாதேவ ஆச்சிரம சைவச்சிறார்களின் மிருதங்க இசை நிகழ்வும் இடம்பெறும். (8-204)


SHARP
be sharp
கொண்டாட்டம்... கொண்டாட்டம்...
பிறவுண்ஸ் வழங்கும் நம்பமுடியாத
கொடுப்பனவுகள் விரையுங்கள்...
ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய
Sharp T.V.5 வருட உத்தரவாதத்துடன்
விற்பனைக்குப் பிந்திய சேவையில்...



14D25 ~~20295~~/= 16775 /=
20D25 ~~30525~~/= 25000/=
21EFGIA ~~38995~~/= 32956 /=
இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BG BROWNS GROUP ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.

## அடிப்படை வசதிகளற்ற குச்சப்பிட்டி மயானம்

யாழ்ப்பாணம்,நவ.18

கைதடி - நுணாவில் பகுதியில் உள்ள குச்சப்பிட்டி பொதுமயானத்தில் அடிப்படை வசதிகள் ஏதுமின்மையால் சடலங்களைத் தகனம் செய்ய வருவோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பற்றைகளால் சூழப்பட்டுள்ள இம் மயானத்தில் தண்ணீர் வசதி, தங்குமிட வசதிகள் ஏதும இல்லை. அத்துடன் சடலங்களை மழை காலத்தில் தகனஞ்செய்வதற்குப் போதிய பாதுகாப்புக் கூடாரங்களும் இல்லை.

சடலங்களைத் தகனக்கிரியைக்காக எடுத்து வரும் மக்கள் இவ்வசதிகள் இன்மையால் பெரும சிரமங்களையும் எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். கைதடி, நுணாவில், மட்டுவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இறப்போரின் சடலங்களைத் தகனஞ்செய்ய இம்மயானத்துக்கே செல்ல வேண்டியுள்ளது.

இம்மயானத்தை உரியமுறையில், புனரமைப்புச் செய்து அதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்த எவரும் அக்கறை காட்டாதது குறித்து இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர். (10-17.3)

# மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் வேலைநிறுத்தத்தால் நோயாளர் பாதிப்பு

தாவடி,நவ.18

நாடளாவிய ரீதியாக மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் கடந்த 15 ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முதல இப்போராட்டம் ஆரம்பமானது. ஏற்கனவே கடந்தவாரம் ஒரு நாள் அடையாள சுகயன விடு முறைப் போராட்டத்துடன் இவர்களின் கோரிக்கைகள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டன.

எனினும், எதுவித உடன்பாடுகளும் ஏற்படாத பட்சத்தில் மருத்துவ ஆய்வுகூட தொழில நுட்பவியலாளர் சங்கம் வரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்க முடிவு செயதது. எனினும், கடந்த 4 மாதங்களாக இவர்கள் மேலதிக வேலைகளில் இருந்து விலகி சட்டப்படியான கடமையிலேயே ஈடுபட்டுவந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உள்ளகப் பயிற்சிகளை மேலதிக 6 மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசு மறுத்தமையைக் கண்டித்தும், மேலதிக நேர சேவையை சுழற்சி முறைக்கு மாற்றியமை, அழைப்பு நேரக்கடமையில் இருந்து மேலதிக நேரச் சேவைக்கு மாற்றியமை, எதிர்காலத்தில் தனியார் மயமாக்கத் திட்டமிட்டமை போன்றவற்றையும் கண்டித்து சங்கம் போராட்டத்தில் குதித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் யாழ். மாவட்ட நோயாளர்களது பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அவசர சிகிச்சைப்பிரிவு, அதிதவிர சிகிச்சைப்பிரிவு, குறைமாதக் குழந்தைகள் பிரிவு, சிறுவர் விடுதி போன்றவற்றிற்கான மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள முடிவு செயதுள்ளனர். எனினும், வெளிநோயாளர் பகுதியிலும், நுண் உயிரியல் ஆய்வுப் பிரிவிலும் கடமையில் ஈடுபடுவதையும் விஷேட மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்வதையும் முற்றாக நிறுத்தி உள்ளனர். எனினும், நீண்ட காலமாக நடத்தப்பட்டுவரும் இப்போராட்டத்தால் நோயாளர்கள் மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. (8-149)

## நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி,நவ.18

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களில் வன்னியில் இருந்து ஏ-9 பாதை ஊடாக மீளக்குடியமர்ந்தோர், வலுவிழந்தோர், விதவைகள் ஆகியோருக்கு அகதிகளுககான ஐக்கியநாடுகள் தூதரகம் நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

இக் குடும்பங்களுக்கு வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கூரை விரிப்பு, சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கியது. (10-173)

## விபத்தில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம்,நவ.18

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்ததாகக்கூறப்படும் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நல்லூர்ப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த குலநாயகம் றமேஸ் (வயது29) என்பவரே படுகாயமடைந்தவராவார். (10-12)


சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

கேள்வி கோரல்
குழாய்க் கிணறு அமைத்தல்

29-09-2004 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு அமைவாகக் குறிப்பிடப்பட்ட குழாய்க் கிணறுகளை இயந்திர வலு மூலம் அமைப்பதற்கும் கைப்பம்பி பொருத்துவதற்குமான வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளை அதற்கென வழங்கப்படும் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி 24-11-2004ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலதிக விவரங்களைச் சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் அறிந்துகொள்ளவும்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
10-11-2004 (சி-39105) (26-14-15)

ந.பாலச்சந்திரன்,
செயலாளர்.


## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,நவ.18

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் பெரியபுராணம் தொடர்பாக தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (8-173)

## செயலமர்வுகள்

வடமராட்சி,நவ.18

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான 'கணித வழுக்கள்' என்னும் விடயம் பற்றிய ஒருநாள் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (8-173-182)

* * *

வடமராட்சி,நவ.18

வடமராட்சி வலய அதிபர்களுக்கான வாண்மைவிருத்திச் செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமையும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (8-173-182)


வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
மணல் விநியோக அறிவித்தல்

இன்று (18.11.2004) வியாழக்கிழமை 29.10.2004ஆம் திகதி குறப்பிட்ட மணல் அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு மணல் விநியோகம் நடைபெறும்.

(சி-39102)(39-14-15-26) - நிர்வாகம்.



முதலாம் ஆண்டு நினைவு அலைகள்



95, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

அமரர்
நாகமுத்து பரராஜசிங்கம்
திதி:18.11.2004

மலர்வு 1931.07.30 உதிர்வு 2003.11.30

அணைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அன்புக்காக ஏங்கும் குடும்பத்தினர்.

லயன் ப.செந்தில்செல்வன் (மகன்),
(மின்சார சபை, யாழ்ப்பாணம்).
(சி-39103)(39-26-14-15)



கண்ணீர் அஞ்சலி

அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
அறங்காவலர்சபை முன்னாள் தலைவர்

அமரர் முத்தையா குமாரசாமி

14.11.2004 கனடாவில் காலமாகிய செய்திகேட்டு ஆறாத்துயரடைந்தோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அறங்காவலர் சபை,
அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்.
(சி-38717) (32-14-15-26)



மரண அறிவித்தல்கள்

சின்னப்பு ரமேஸ்



நாவலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ரமேஸ் 14-11-2004 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
உடுப்பிட்டி. (38720) (26-14-15)

தகவல்:
குடும்பத்தினர்.

விசுவலிங்கம் இராசதுரை



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் இராசதுரை அவர்கள் 15-11-2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மருக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும் தேவஞானி, இராசபரிமளம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற குணசீலன், மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாகேஸ்வரி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயானந்தன் (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபன், விஜிதீபன், ராஜ்தீபன், நிர்த்தியா, கோபிநாத், வினோஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-11-2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

557/3, மதவடி ஒழுங்கை,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனோகரன் (மகன்)
(38718) (26-14-15)



சாவகச்சேரி பிரதேசசபை

01.01.2005 முதல் 31.12.2005 வரை
சந்தை/இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

கேள்வி அறிவித்தல்

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 29.11.2004
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 01.12.2004
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 02.12.2004 (காலை 10.00 மணிக்கு)

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01. | கொடிகாமம் சந்தைக் குத்தகை (துவிச் சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட) | 1,100,000.00 | 5,000.00 | 500.00 |
| 02. | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 125,000.00 | 500.00 | 200.00 |
| 03. | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 500.00 | 100.00 |
| 04. | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல.01 | 6,500.00 | 150.00 | 100.00 |
| 05. | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல.02 | 5,500.00 | 150.00 | 100.00 |
| 06. | வரணிச் சந்தைக் குத்தகை | 111,000.00 | 250.00 | 200.00 |
| 07. | வரணிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 250.00 | 100.00 |
| 08. | கைதடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 250.00 | 200.00 |
| 09. | கைதடிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 500.00 | 200.00 |
| 10. | கைதடிச் சந்தைக் குத்தகை | 30,000.00 | 500.00 | 100.00 |

குறிப்பு:

- ▲ இறைச்சிக்கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகைகளைச் செலுத்த வேண்டும்.
- ▲ கேள்விப்பத்திரக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட Vat(15%) மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- ▲ கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்..
- ▲ கேள்வித் தொகைக்கு மேலதிகமாக Vat 15% செலுத்தவேண்டும்.
- ▲ சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக்கூடாது.
- ▲ கால்நடைகள் கைதடிக் கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சிகள் கொண்டுவருதல் வேண்டும்.
- ▲ மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகங்களிலும், உப அலுவலகங்களிலும் அலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- ▲ போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
16.11.2004

(C/39104)(42-14-15-26)

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

# உளவளம் குன்றிய பிள்ளைகளுக்கு சிவபூமி பாடசாலை ஆற்றும் பணிகள்

## கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் பாராட்டு



கோண்டாவில்,நவ.18

எங்களால் ஆட்டிலறிகளை அழிக்கமுடியும். ஆனையிறவைப் பிடிக்க முடியும். ஆனால், உளவளம் குன்றிய பிள்ளைகளைத் தாங்கி, சிவபூமிப் பாடசாலை ஆற்றுகின்ற நல்ல காரியத்தைச் செய்வது கடினம். இது சில பீஷ்மர்களால் தான் இதனைச் செய்யமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற வாணிவிழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சிவபூமி பாடசாலைக்குள் காலடி எடுத்து வைக்கும்வரை, நான் இப்படியோர் அனுபவத்தைக் கனவிற்கூடப் பெற்றதில்லை. இந்த விழாவில் சிவபூமி மாணவர்கள் காட்சிப் பொருளாக ஒரு மூலைக்குள் இருக்க, ஏனையோர் நிகழ்வை நடத்துவார்கள் என்ற கற்பனையுடன்தான் நான் இங்கு வந்தேன். ஆனால், இந்தப் பிள்ளைகளே நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள். இதனால் இந்தப் பிள்ளைகளினுடைய மகிழ்ச்சியில் நானும் பங்கெடுத்தேன். இன்று நான் பெற்ற மகிழ்ச்சியை என்றைக்குமே பெற்றதில்லை. இப்படியான பிள்ளைகள் வாழ்கின்ற சில வீடுகளில் இவர்களை வேண்டாப் பொருளாகவே வைத்திருக்கின்றார்கள். ஆனால், இவர்களுக்காக இந்த ஆசிரியர்கள் ஆற்றுகின்ற பணி என்னை நெக்குருக வைக்கிறது. இது ஒரு தாய்மையால் கூட முடியாது. தாய்மையே சிலவேளைகளில் இதை ஒரு கடமையாகவும், தொல்லையாகவும் நினைப்பதைக் காண்கிறேன்.

இந்த நிகழ்வில், ஆசிரியர்கள் பிள்ளைகளோடு சேர்ந்து ஆடிய பொய்யில்லாத தன்மையைப் புரிந்துகொண்டேன். இதற்காகத் தம்பி ஆறு.திருமுருகனையும் இதனோடு இணைந்து சேவையாற்றுபவர்களையும் வாழ்த்துகிறேன் - என்றார்.

வைத்திய கலாநிதி பேரானந்தராஜா உரையாற்றும்போது:-

சமுதாயத்தில் மனிதனாகப் பிறந்த எவரையும் ஒதுக்கக் கூடாதென்பது மனித ஜனநாயகம். எங்கள் நாட்டில் மனிதப் பண்புகள் சரியானமுறையில் விருத்தி காணவில்லை என பது பொது அபிப்பிராயம்.

பிறப்பில் குறைபாடு உடையவர்களைப் பேணுகின்ற திட்டங்களை உலக நாடுகள் பல வருடங்களுக்கு முன்னே வகுத்து அதன் மூலம் விருத்தி கண்டுள்ளன. எங்கள் நாட்டில் அதுவும் யாழ். மண்ணில் தொண்ணூற்றைந்து வீதத்திற்கு மேலாக எழுத்தறிவு மிக்கவர்கள் இருக்கின்றபோதிலும், அவர்களிடம் மனித நேயப் பண்புகள் சரியான முறையில் வளர்ச்சி பெறாமை நாம் செய்த தவக்குறைவு என்றார்.

இந்தியாவில் நூறு கோடி மக்கள் வாழ்கின்றபோதிலும் அங்கு ஏராளமான கருணை நிலையங்களும் குறைபாடுடைய சிறுவர்களுக்கான கல்வி நிலையங்களும் வளர்ச்சி பெற்றுள்ளன.

எமது நாட்டில் இந்த நிலை இல்லை. இந் நிலையில் இருந்து சமூகத்தை மாற்றியமைக்காகவிட்டால் நாம் எவ்வித அபிவிருத்தியையும் அடைவது கடினமாக இருக்கும் - என்றார்.

இப்படியான பிள்ளைகள் வாழ்வதற்குப் பாதுகாப்பான இடம்வேண்டும். குறிப்பாகப் பெண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வேண்டும். ஏனென்றால், அவர்கள் உலகத்தில் உள்ள தீய விடயங்களை அடையாளம் காணமுடியாதவர்களாய் இருப்பார்கள். இவர்களிடத்தில் ஒரு மறையான எண்ணம் மனதிலே தோன்றுவதில்லை. அதனால், அவர்களைத் தீயவர்கள் பிழையாகப் பாவிக்கக்கூடும். இத்தகைய நிலை காணப்படும் பிள்ளைகளுடன் நாம் கூட இருக்கவேண்டும். இந்தப் பிள்ளைகளினுடைய இலக்குகளை நிதானப்படுத்தி அவர்களது முன்னேற்றத்திற்கு வழிசமைக்கவேண்டும். இதற்காக இங்குள்ள சிவபூமி ஆசிரியர்கள் சிறப்பானதொரு பணியை ஆற்றி வருகின்றார்கள். அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

சிவபூமி பாடசாலை ஒரு பெரிய சிவத்தொண்டை, அறப்பணியை ஆற்றுகின்ற பாடசாலையாகும் இந்தப் பாடசாலையோடு இணைந்து தொண்டாற்றுபவர்கள் வாழ்வின் இறுதிக் காலத்தில் மனநிறைவானதொரு பணியைச் செய்தோம். ஆகவே, நாங்கள் சந்தோசமாக மரணிக்கலாம் என்ற திருப்தியை அடையத்தக்கவர்களாக இருப்பார்கள்-என்று கூறினார்.(ப-49)

# கடற்றொழிலாளர் அனைவருக்கும் சேவையாற்றியவர்

குருநகர்,நவ.18

அமரர் அருளப்பு சென்.டெனிஸ்ராசா (செல்விஸ்) குருநகர் யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றியவராவார்.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகச் சேவைபுரிந்து அண்மையில் காலமான அருளப்பு சென் டெனிஸ்ராசாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரைநிகழ்த்தியபோது குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவர் ம.பிறேமன் மேற்கண்டவாறு தெரித்தார்.

அஞ்சலி நிகழ்வு குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, அமரராகியுள்ள டெனிஸ்ராசா சமூகசிந்தனை உள்ள மனிதனாக வாழ்ந்தவர். அவரது திட்டத்தின்படி எமது சங்க வளவில் கல்நார்ப் படகுகளைத் தயாரிக்கும் பணி முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. வன்னியில் இடம்பெயர்ந்து வாழ்ந்தகாலத்தில் அங்கும் பல திட்டங்களைத் தீட்டி எமது மக்களின துயர்துடைத்தவர். பாலாவியில் அந்நாள்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்த எமது பகுதி மக்களுக்கு மட்டுமல்லாது யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து அங்கு வாழ்ந்த கடற்றொழிலாளர்களும் இவரது திட்டத்தால் பயனடைந்தனர் என்று கூறினார்.

அஞ்சலி நிகழ்வில் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணமும் உரைநிகழ்த்தினார். (ப)




# மனித வாழ்க்கையில் இலட்சியத்தை அடைவதற்கான வழிதான் கல்வி



யாழ்ப்பாணம்,நவ.18

உயர்கல்வியானது எல்லோருக்கும் கிடைக்கும் ஒரு சூழல் உருவாகும்போதுதான் மனித சமூகத்தில் சிந்திக்கும் ஆற்றல் வெளிப்படும்.- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், தமிழ் மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 5ஆம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்குமேலும் தெரிவிக்கையில்:

மனிதனுடைய வாழ்வில் இலட்சியத்தை அடைவதற்கான வழிகளில் ஒன்றுதான் கல்வி என்று கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். எனவே, அந்தக் கல்வியைக் கருத்தாகக் கற்கும்போதுதான் இலட்சியத்தை அடைய முடியும்.

அதேபோன்று போராட்டம் என்பது ஒரு மகிழ்ச்சியான, கௌரவமான, பாதுகாப்பான சூழ்நிலையில் பெறுவது எந்த வெற்றிக்கும் போராடாத வாழ்க்கை வாழ்க்கையல்ல. எனவே, போராடும் ஒரு விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்களாகிய நாம் இந்த மாணவர்கள் தமது வாழ்வின் இலட்சியத்தை அடையும் பாதையில் தன்னம்பிக்கையுடன் இருந்தமைக்காக இவர்களைப் பாராட்டுவதுடன், இவர்களுக்கு ஊக்கம் அளித்த பள்ளி முதல்வர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

கல்வி என்பது ஒரு சமூகப் பொருத்தப்பாடான மனிதனைத் தோற்றுவிக்க வேண்டும். எங்களுடைய கல்வி அடிப்படையான மனிதனை உருவாக்கும் நிலையில் பூரணத்துவத்தைக் கொண்டிருக்கின்றதா? என்றும் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

வடக்கு - கிழக்கில் வருடாந்தம் 18 ஆயிரம மாணவர்கள் உயர் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள். அவர்களில் 800 பேர் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகின்றார்கள். அவர்களில் 400 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. மிகுதி மாணவர்களில் 500 பேருக்கு கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி கிடைக்கினறது. ஏனைய 16 ஆயிரத்து 800பேர் உயர் கல்வியைப் பெறமுடியாத நிலை நமது சூழலில் உள்ளது.

இலங்கை அரசின் பொருளாதார மாற்றம் மூலம் நமது கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. நமக்கென்று ஒரு நாடு உருவாகும் போது நாம் அந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எமக்கென்று ஒரு கல்விமுறையை நாம் ஏற்படுத்தி எல்லோருக்கும் கல்வி என்ற ஒரு நிலையை உருவாக்க முடியும். இதன் மூலமே எல்லோரும் வேலைவாய்ப்பைப் பெற முடியும். (ப-202-203)

# யுத்த முனைப்புக்கு ஒரு முகம் சமாதானத்துக்கு இன்னொரு முகம்

## ஜனாதிபதியின் இரட்டைவேடம் பற்றி செந்திவேல்



யாழ்ப்பணம்,நவ.18

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார சமாதானத்திற்கு ஒரு முகத்தையும் யுத்த முனைப்புக் கோரி நிற்கும் பேரினவாத சக்திகளுக்கு மற்றொரு முகத்தையும் காட்டிவருகிறார். சமாதானத்திற்காக காட்டிவரும் முகம் பொய் முகம் என்பதனாலேயே பேசசை ஆரம்பிக்க முடியாது, காலத்தை இழுத்தடித்துச் செல்லும் தந்திரோபாயத்தைக் கையாண்டு வருகிறார். அதேவேளை இந்திய, அமெரிக்க வல்லரசு ஆதிக்க சக்திகளின் முழு ஆதரவுடனும் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்காதுவிடும் பேரினவாத சக்திகளின் யுத்த முனைப்புகளுக்கு தனது உண்மையான முகத்தை காட்டி நிற்கின்றார். இதனால் இரண்டரை வருடங்களைக் கடந்து நிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் கீழான யுத்த நிறுத்தமும் அபாயமான கட்டத்தை அடைந்து மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என மக்கள் அஞ்சவேண்டிய நிலையிலேயே இருந்து வருகின்றனர். இது நாட்டைப் பற்றியோ மக்களைப் பற்றியோ தேசிய இனப்பிரச்சனையின் தீர்ப்பு பற்றிய அவசியத்தையோ உணராது ஆளும்வர்க்க நலன்களையும் அதிகாரப் பிடியைப் பற்றியும் சிந்திக்கும் போக்கேயாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் மறைந்த அரசியல் குழு உறுப்பினர் சி.நவரத்தினத்தின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் கூறினார். மேற படி கூட்டத்தில் செந்திவேல் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று ஒரு புறம் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சு ஆரம்பிக்கப்படாது இழுபட்டுச் செல்கிறது. ஐ.ம.சு. முன்னணி அரசும் பதவிக்குவந்து ஆறு மாதங்களாகியும் பேச்சுக்கான முயற்சிகள் சிறு அடிதானும் முன்னேறவில்லை. யுத்தமும் இல்லை, சமாதானமும் இல்லை என்ற தோரணையிலும் பேச்சும் வேண்டாம் அரசியல் தீர்வும் அவசியமற்றது என்ற பேரினவாத உள்நோக்க அடிப்படையிலேயே நிலைமைகளை இழுத்தடித்துச் செல்வதையே விரும்புகின்றனர்.

மறுபுறத்தில் மோசமடைந்துள்ள, பொருளாதார நெருக்கடியும் வாழ்க்கைச் செலவும் சாதாரண மக்கள் எட்டிப் பிடிக்க முடியாதவாறு உயர்ந்து செல்கிறது. சம்பள உயர்வு என்பது வெறும் கண்துடைப்பாகவே அமையப்போகிறது. இன்றைய பொருளாதார நெருக்கடியும் விலைஉயர்வு, கட்டண அதிகரிப்பு தற்செயலானவையல்ல. கடந்த கால் நூற்றாண்டு கால தாராளமயம், தனியார்மயம், உலகமயமாதல் என்பனவற்றின் பாரிய பின்விளைவுகளாகும் என்பதை மறந்து விடமுடியாது. இடையில் தம்மை மூன்றாவது சக்தி எனக் கூறிக்கொண்டு, அரசியல் அரங்கிற்கு வந்து போலி இடதுசாரிகளான ஜே.வி.பியும் இன்றைய அரசியல் பங்காளியாகி தாராளமயம், தனியார்மயம், உலகமயமாதலுக்குப் பணிந்து நின்று மக்களுக்குப் பதில் கூற முடியாது திண்டாடுகின்றனர் என்று கூறினார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தில் கொழும்பு, மலையகம், வவுனியாப் பிரதேசங்களில் இருந்து வந்த கட்சியின் தலைமை உறுப்பினர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். 'பொதுவுடமைப் போராளியின் நினைவுகள்' என்னும் நினைவு நூலும் வெளியிடப்பட்டது. 'மனிதம் மண்ணில் உயரும் வரை' கவியரங்கும் இடம்பெற்றது.(ப)

# ஆசிரியர்களின் வேலைப்பளு அதிகரித்துள்ளது மாணவர்களின் கல்வித் தரமும் உயரவில்லை

## கணிப்பீடுகள் பற்றி மகாசிவம் விமர்சனம்

பாடசாலை மாண வர்களுக்கு நடத்தப்படும் கணிப்பீட்டுப் பரீட் சைகள், ஆசிரியர்கள் மீது வேலைப்பளுவைச் சுமத்துவதாக அமைகிறதே தவிர, மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்துவதாக இல்லை.

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.


தென்மராட்சி கல்வி வலயமும் இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய 'ஆசிரியர் தினம்' கடந்தமாதம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகாசிவம் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களுக்கு நடத்தப்படும் கணிப்பீட்டுப் பரீட்சைகள், மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதில்லை. மாறாக, ஆசிரியர்களுக்கு வேலைப் பளுவையே சுமத்துகிறது. வேலைப் பளுவுக்கேற்ற சம்பளம் கொடுப்பதில்லை.

எமது சங்கத்தின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக, மாணவர்களுக்கு கொடுக்கப் படும் கணிப்பீட்டுப் பரீட்சைகள் 50 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.



பெண் ஆசிரியர்களின் நலன்கருதி ஒவ்வொரு பிள்ளைப் பேற்றின் போதும் 84 நாள்கள லீவாகப்பெற ஆவன செய்யப்பட்டுள்ளது. தாய்ப்பால் கொடுப்பதற்கு ஒரு மணித்தியாலம் குறுகிய இடைவேளை, கர்ப்பிணிப் பெண்களா யின் தமது 5ஆவது மாதத்தின் பின் கடமைக்கு காலை அரைமணி பிந்திவந்து, அரைமணி நேரம் முந்திப் போகக்கூடிய சலுகைகளையும் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

மேலும், உள்வாங்கலில் தளர்ச்சி ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கஷ்டப்பிரதேசத்தில் சேவையாற்றும் ஆசிரியருக்குக் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியசேவை ஏனைய சேவைகளை விடச் சிறந்தது. நாட்டுக்கும் சமூகத்துக்கும் நற்பிரஜைகளை உருவாக்கும் கடமை உங்களுடையது. மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு கடமையாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (ப-204)

# அர்ப்பணிப்புடன் தானாக முயல்பவன் ஒருபோதும் தோல்வியுறமாட்டான்

அர்ப்பணிப்புடன் தானாக முயற்சி செய்பவன் ஒருநாளும் தோல்வியடையமாட்டான் என்று குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு நடத்திய 'நெய்தல் விழா' நிகழ்வின் இரண்டாம் நாள் பரிசளிப்பு விழாவின்போது உரை நிகழ்த்திய யாழ்கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.தங்கராசா தெரிவித்தார்.

இந்நிகழ்வு குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத் தலைவர் அ.பீற்றர்குமார் தலைமையில் குருநகர் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொலைக்காட்சிப் பாவனை எம்மத்தியில் அதிகரித்துள்ளது. கல்விப் போதனைக்காக பல நிறுவனங்களும் கல்வி அமைச்சும் கூட பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப்பெட்டிகளை வழங்குகிறது. எனவே, தொலைக்காட்சியை பார்க்கக் கூடாது என நாம் தடைசெய்யவில்லை. ஆனால், மாணவர்கள் சினிமாப் படங்களையும் கலாசார சீரழிவுக் காட்சிகளையும் மட்டும் பார்ப்பதற்கு தொலைக்காட்சியைப் பயன்படுத்தக்கூடாது.

அருமையான கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் இடம்பெறுகின்றன. கணனிச் செயற்பாடுகள் நாளாந்தம் தொலைக்காட்சியில் வெளிவருகின்றன. அவைகளைப் பார்த்து பயனடையலாம்.

பெற்றோர்களில் தங்கியிருப்பதிலும்பார்க்க, மாணவர்கள் தங்களிலேயே தங்கியிருக்கப் பழகிக்கொள்ளவேண்டும். பெற்றோர் என்ன சொல்லட்டும், நான் படிப்பேன், பரிசு எடுப்பேன் என்ற சிந்தனை உங்களுக்கு இருக்கட்டும் ஆடம்பரமான செலவுகளைக் குறைத்து கல்விக்கு முக்கியத்துவம் கொடுங்கள். இன்றைய கல்வித் திட்டம் தனியான கல்வியல்ல. விளையாட்டும் படிப்பாகிவிட்டது. இளைஞர்களை க.பொ.த. சாதாரணதர வகுப்புவரையாவது படிப்பிக்க பெற்றோாகள் முயற்சிக்கவேண்டும் என்று கூறினார். (ப)

# இந்த அரசின் ஆறுமாத ஆட்சிக் காலத்தில் 762 கொலைகள்; 28,017 குற்றச்சம்பவங்கள்

## புள்ளி விவரங்களோடு சாடுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,நவ.17

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறு மாதத்தில் 762 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 28 ஆயிரத்து 17 குற்றச்செயல்கள் இடம் பெற்றுள்ளன. பாதுகாப்பு அமைச்சை எமது ஐ.தே.கட்சி அரசிடமிருந்து பறிப்பதற்கு முன்னர் தாம் கூறிய காரணங்களை மறந்த நிலையில் இன்று பொலீஸார் மீதும், நீதித்துறை மீதும் குற்றம் சுமத்திவிட்டு ஜனாதிபதி தப்பிக்க முயல்கின்றார்.

இப்படி ஜனாதிபதி மீது குற்றம் சுமத்துகின்றார் ஐ.தே.கவின் பிரதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க அது பற்றி மேலும் கூறியதாவது:-

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம திகதி ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையின்போது, நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன எனவும் திருகோணமலை குரங்கு பாஞ்சானில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்துள்ளனர் என்றும், அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் கூறினார். இவற்றைக் கூறியே அவர் எமது அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பின்னர் மேற்கூறிய விடயங்கள் தடுக்கப்பட்டனவா?

கொலைகள் இடம்பெறாத நாளே இல்லை என்ற ஒரு சூழ்நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த ஜனாதிபதி 10 வருடங்களாக ஆட்சி செய்தார். இந்தப் பத்து வருடங்களில் நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய சேவை என்ன?

ஜே.ஆர்.ஜயவர்த்தனா பத்து வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தார். அவர் இந்த நாட்டுக்குச் செய்த பல நன்மைகள் உண்டு.

இந்த ஆட்சிக் காலத்தில் அரசின் நிவாரணங்களைப் பெற்ற வறிய குடும்பங்களின் எண்ணிக்கை பல லட்சத்தினால் அதிகரித்துவிட்டது.

நீதித்துறையைப் பார்த்துக் குற்றஞ்சாட்டுகிறார் ஜனாதிபதி.

அண்மையில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பதவி விலகுவதற்கு முதல்நாள் நீதித்துறை பற்றித் தெரிவித்த கருத்து முக்கியமானது. இந்த நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் நீதிபதிகளாகக் கடமையாற்றுபவர்களின் கைகளுக்கு ஒரு வழக்கு விசாரணை சென்றுவிட்டால், தீர்ப்பு இப்படித்தான் அமையும் என்று மக்களே தீர்மானித்து விடுகிறார்கள். இது சட்டத்துறைக்குப் பெரும் இழுக்கு என்று அவர் கூறியுள்ளார்.

இது எந்த அளவுக்கு உண்மை என்பது இப்போது புலனாகியுள்ளது.

எஸ்.பி.திஸநாயக்காவுக்கு ஏப்ரல் மாதம் நீதிமன்றில் வழங்கப்போகின்ற தீர்ப்பு பற்றி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க பொது மேடையில் உறுதிபடக் கூறியிருக்கிறார். ஏப்ரல் மாதம் எஸ்.பி.திஸநாயக்கா சிறைவாசம் அனுபவிப்பார் என்று அவரால் எப்படி இப்போதே உறுதிபடக் கூறமுடியும்? நீதிமன்றில் உள்ள வழக்குப்பற்றி அவர் எப்படி விமர்சனம் செய்ய முடியும்?

பத்து வருடங்கள் ஆட்சிசெய்துவிட்டு ஓய்வுபெறப்போகும் ஜனாதிபதியால் தேர்தல் ஆணைக்குழு ஒன்றைக்கூட நியமிக்க முடியவில்லை. இது அவரது திறமைக்குச் சிறந்த உதாரணமாகும். மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதிலேயே காலம் கடத்திய ஜனாதிபதி, நாட்டுக்காக எதுவும் செய்யாமல் ஓய்வுபெறப்போகிறார் - என்றார் அவர். (ஐ-க)

## பாகிஸ்தான் பிரதமர் ஞாயிறன்று இலங்கைக்கு விஜயம் செய்கிறார்

கொழும்பு,நவ.18

பாகிஸ்தான் பிரதமர் செளகட் அஸீஸ் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள் சிலரும் இலங்கை வரவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது 'சார்க்' அமைப்பின் தலைமைத்துவத்தைப் பாகிஸ்தான் வகித்துவருகின்றது. அடுத்த வருடம் ஜனவரியில் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டில் தலைமைத்துவம் பங்களா தேஷிற்குக் கையளிக்கப் படவுள்ளது. தலைமைத்துவம் மாற்றமடைவதற்கு முன்னதாக 'சார்க்' வலய நாடுகளுக்கு மேற்கொள்ளும் சம்பிரதாயபூர்வ விஜயமாகவே பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வருகிறார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்படப் பலரையும் பாகிஸ்தான் பிரதமர் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-க)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.18

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவின் ஆரம்பப்பிரிவுப் பரிசளிப்புவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் செல்வி பா.மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயனும் சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி, கிராம உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். (10-202)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (10-202)


### அருள் கொமினி கேஷன்ஸ்

2006 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான லொத்தர் விசா விண்ணப்பங்களை உடனுக்குடன் அனுப்பிக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி:

05-ஜனவரி 2005

இல.01,
பிறவுண் வீதி,
நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P.:+94212223536
e.mail.arulcom2003 @ yahoo.com


### துயர் பகிர்கின்றோம்



தவசிகுளம் மிருசுவில் காணிக்கை அன்னை ஆலய அருட்பணிச்சபைச் செயலாளரும் சென்.மேரீஸ் இளையோர் கழக உறுப்பினருமாகிய யூட்டிலியன் ஜீவரட்ணம் மற்றும் மேரி மெற்றில்டா ஆகியோரின் அன்புத் தந்தை

**அந்தோனிப்பிள்ளை இராயப்பு**

அவர்களின் மறைவினால் வருந்தும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன், அன்னாரின் ஆன்மா விண்ணக மகிமையடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*ஆலய பங்கு மக்களும்,*
*சென்.மேரீஸ் இளையோர் கழகமும்.*

(38725)

## படிவங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையிலிருந்து சேதமடைந்த வீடுகளின் விவரம் திரட்டும் படிவங்களைப் பெற்றவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்த படிவங்களைக் கிளை அலுவலகத்தில் மீளக்கையளிக்குமாறு செயலாளர் அ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் கடமைபுரியும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சகல ஊழியர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-202)


### அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 630 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 16-11-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4099100-4114856 |

வெற்றி இலக்கங்கள்

05 26 42 50

லக்கினம் துலாம்

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ஜக்பொட் ரூபா. 17,57,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,39,030 | 10/- | 33,90,300/- |
| 2.இலக்கங்கள் | 31,100 | 20/- | 6,22,000/- |
| 1.இல + லக்கினம் | 30,815 | 30/- | 9,24,450/- |
| 2.இல + லக்கினம் | 2,836 | 100/- | 2,83,600/- |
| 3.இலக்கங்கள் | 834 | 500/- | 4,17,000/- |
| 3.இல + லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 4,04,700 | - | 76,42,600/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,42,600/-

தொடர் இல. 5080489 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 நொவம்பர் 19ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4112358-1-61
4108481-6-40
4102673-6-63
4105973-9-18
4099415-5-53


## மரண அறிவித்தல்கள்

### செல்வி கிருஷாந்தி பூலோகநாதன் (சாந்தி)



(B.Sc. Engineering - Moratuwa)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கிருஷாந்தி பூலோகநாதன் (கணனிப் பொறியியலாளர்) 15.11.2004 திங்கட்கிழமையன்று அகாலமரணமானார்.

அன்னார் நாகலிங்கம் பூலோகநாதன் (முன்னாள் தொலைத்தொடர்பு பொறியியலாளர் - Botswana) மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மகளும் சஞ்சீவன் (பொறியியலாளர் - U.K.), கீர்ததன் (பொறியியல் பீடம், 3ஆம் வருடம் - மொறட்டுவ), கிருஷநாத் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகலிங்கம், திருமதி செல்லம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் திருமதி செ.பொன்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் திருமதி பரமலிங்கம் (கொழும்பு), திரு.திருமதி தியாகராஜா (U.K.), திரு.திருமதி சிவராஜா (France), திரு.திருமதி கணேசமூர்த்தி (கொழும்பு), திரு.திருமதி பாலேந்திரா (U.K.) திரு.திருமதி பத்மநாதன் (Germany), காலஞ்சென்ற பேரின்பநாதன் ஆகியோரின் பெறாமகளும் திரு.திருமதி சத்தியமூர்த்தி (Canada), திரு.திருமதி காந்திமூர்த்தி (Australia), திரு.திருமதி குருமூர்த்தி (Australia), திரு.திருமதி சாந்தமூர்த்தி (Canada) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று (18.11.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21A, Canal Lane,*
*Wellawatte. Tel.: 2361909.*

(சி-39097)

தகவல்:
குடும்பத்தினர்.

### அந்தோனிப்பிள்ளை தவநாதன் (மெக்கானிக் மாமா)



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை தவநாதன் நேற்று (17.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்.*

(38726)

தகவல்:
மருமக்கள்.

### தவறிவிட்டது

(38721)

யாழ்ப்பாணம், நல்லூர், இல.50, மருதடி வீதியைச் சேர்ந்த மாணிக்கம் இராசேஸ்வரன் என்பவருடைய 500-0549 இலக்கமுடைய மோட்டார்சைக்கிள் அனுமதிப்பத்திரத்துடன் மேலும் பல முக்கிய ஆவணங்களடங்கிய பொலித்தீன்பை ஒன்று நல்லூர் ஆலய முன்றிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இல.222 7773, 0777 110218 உடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

வடமராட்சி,நவ.18

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன.

பாவற்காய் கிலோ 200 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 120 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 30 ரூபாவாகவும், கோவா கிலோ 90 ரூபாவாகவும், லீக்ஸ் கிலோ 80 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 60 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

(10-173)

"விடியல் காணவே வேள்வி செய்து - தாய் மடியில் உறங்கு மாவீரர் நினைவினில்..."

### மாவீரரும் சைக்கிளோட்டப் போட்டியும் எழுச்சிமிகு மரதன் ஓட்டப் போட்டியும்

யாழ்.மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டோடு எமது மண்ணின் வீர, வீராங்கனைகளுக்கான

**சைக்கிள் ஓட்டப்போட்டி**

ஆண்களுக்கானது 30 மைல்.நேரம் காலை 6.30 மணி.
பெண்களுக்கானது 10 மைல். நேரம் காலை 8.00மணி.
காலம்: 20.11.2004 சனிக்கிழமை
ஆரம்பமாகும் இடம்: நல்லூர் முருகன் ஆலய முன்றில்

**மரதன் ஓட்டம்**

ஆண்களுக்கானது 10 மைல். நேரம் காலை 6.30 மணி.
பெண்களுக்கானது 05 மைல். நேரம் காலை 8.00 மணி.
காலம்: 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை
ஆரம்பமாகும் இடம்: நல்லூர் ஆலய முன்றில்.
குறிப்பு: இப்போட்டிகளில் ஆர்வமுள்ளவர்கள் குறித்த நேரத்தில் போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிப் பெறுமதிமிக்க பரிசில்களை வென்றெடுங்கள்.
(அனுசரணை: சிற்றூர்திச் சங்கம், ஓட்டோச் சங்கம், மோட்டார் கார்ச் சங்கம்)

(சி-39107)

# தென்னந்தோட்ட உரிமையாளருக்கு நஷ்டஈடு தர நிதி ஒதுக்குங்கள்!

யாழ்ப்பாணம்,நவ.18

வடமாகாணத்தில் படையினரால் அழிக்கப்பட்ட தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு வரவு - செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கு வதற்கு ஆவண செய்யவேண்டும்

- இவ்வாறு தெரிவித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவுக்கு வடமாகாண தெங்குப் பயிர்ச் செய்கை யாளர் சங்கத்தின் தலைவர் அ.நல்லதம்பி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் பல ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் படையினரால் அழிக்கப்பட்டுள்ளன. தெங்குச் செய்கையே தொழிலாகக் கொண்டிருந்த மக்கள் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டதால் பெரும் கஷ்டத்தில் வாழ்ந்து வரு கின்றனர்.

இவர்களுக்கான நஷ்ட ஈட்டினை வழங்குவதற்காக அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்க ஆவண செய்யவேண்டும்.

- இவ்வாறு அதில் கோரப்பட்டுள்ளது. (ஐ-7)

# எழுதுவினைஞர் சங்கத்தின் பெயரை மாற்ற முடிவு

யாழ்ப்பாணம்,நவ.18

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் விரைவில் 'வடக்கு - கிழக்கு மாகாண சேவை எழுதுவினைஞர் சங்கம்' எனப் பெயர் மாற்றப்படவிருக்கிறது.

பெயர் மாற்றுவது தொடர்பான பிரேரணை கடந்த 24.10.2004 அன்று நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய சங்க அங்கத்தவர்கள் பலர் மாகாண சேவையின் திணைக் களங்களுக்கு கடந்த ஜூன் முதல் இடமாற்றப்பட்டிருக்கின் றனர். இதனால் சங்கத்தின் யாப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'மாநகர, நகர, பிரதேச சபைகளில் கடமையாற்றும் எழுது வினைஞர்கள்' என்ற வரையறையை வடக்கு - கிழக்கு மாகாண சேவை எழுதுவினைஞர்கள் என்று மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுக் கூட்டம் விரைவில் கூட்டப்படவிருக்கிறது. கூட்டத்தில் 'சங்கமுரசு' என்னும் மலரை வெளியிட ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாக சங்கத்தின் புதிய தலைவர் ச.பரமேஸ்வரன் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

மலரில் இடம்பெறவேண்டிய ஆக்கங்களை சங்கத்தில் சேவை மூப்பு உள்ள அங்கத்தவர்களிடம் இருந்தும், ஓய்வுபெற்ற அங்கத்தவர்களிடமும் இருந்தும் சேகரிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்கள் ஜனவரியிலேயே தொடங்கிவிடும்

வடமராட்சி கிழக்கு,நவ.18

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புக்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது ஜி.சீ.ஈ.சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப் படுகின்ற முன்னோடிப் பரீட்சையில் மாணவர்கள் பெறுகின்ற பெறுபேற் றின் அடிப்படையில் புதிய வகுப்புக்கள் ஜனவரி மாதத்திலேயே ஆரம்பிக்கப்படவுள்ளன.

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சைப பெறுபேறுகள் வெளியாகும் வரை மாணவர்கள் பாடசாலைக்கு வெளியே நிற்பதைத் தவிர்ப்பதற்காகவே இப்புதிய நடைமுறையினைப் பாட சாலைகள் கடைப்பிடிக்க முன்வந்துள்ளன. (ஐ-182)

# கூட்டுறவுப் பணியாளர்கள் சிரமதானம்

கொழும்புத்துறை,நவ.18

மாவீரர் தினத்தை ஒட்டி யாழ்.பல நோ.கூ. சங்கப் பணியாளர்கள் எதிர்வரும் சனிக்கிழமை சிரமதானம் மேற்கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் சங்க தலைமைச் செயலக வளாகம், அதனை அண்டிய வீதிகள் என்பன சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்படும்.

இதேவேளை, சங்கக்கிளைகள் சுற்றாடல் என்பனவற்றிலும் சுத்தம் பேணப்படவேண்டும் என்று சங்கத்தலைவர் சூ.சிறில் கேட்டுள்ளார். (ஐ-30-17)

# துயிலும் இல்லம் புதுப்பொலிவு

வடமராட்சி கிழக்கு,நவ.18

வடமராட்சி கிழக்கில் கடந்த ஆண்டு புதிதாக திறந்து வைக்கப்பட்ட உடுத்துறை மாவீரர் துயி லும் இல்லம் புதுப்பொலிவு பெற்று வருகின்றது.

மின் இணைப்பு, கட்டடநிர்மாண வேலை ஆகியன மாவீரர் தினத்தையொட்டி விரைவு படுத்தப்பட்டுள்ளன.

மாவீரர் துயிலுமில்லத்திற்கு செல்லும் வீதி யையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ஐ-182)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் அரச உத்தியோகத்தர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் வெற்றி பெற்று 2004 நவம்பர் 16 ஆம் திகதி கொழும் பிலுள்ள அமைச்சு அலுவலகக் கேட்போர் கூடத்தில் பரிசினைப் பெற்றுப் பாராட்டு விழாக்காணும் புலோலி தென்மேற்கு கிராம அலுவலர்

**திரு.பொ.தயாநிதி** அவர்களை

பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் சிறப்புடன் செயற்படவும் மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

*பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

பிரதேச செயலாளர், நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

(38731)(43-11-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 - 10 - 1969

விண்ணில் 30 - 11 - 2003

திதி:சப்தமி

அமரர்

**கணபதிப்பிள்ளை அருந்தவராசா**

(கண்ணன்)

அண்ணா!

நீ எம்மைத் தாங்கி நிஜமாக்கினாய்
மீளாத் துயில் கொண்டு நிழலாகினாய்
நாள் தோறும் உனை நினைத்து வாழ்ந்து வந்தோம்
எமை எல்லாம் வாழ வைக்க கடல் கடந்தாய்
இறுதியில் பாரத தேசத்தில் உனது உயிர்
பிரிந்த செய்தி கேட்டு பரிதவித்தோம்
போனது உன் உயிர் தான் - ஆனாலும்
ஆனது எமது வாழ்க்கை இருட்டில்.
விழிநீரைக்காணிக்கையாக விதைக்கின்றோம்
வழிபார்த்து நிற்கின்றோம் நின் வரவை.
அழியாது உன் நினைவு எம் மனதில்
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்
ஆத்ம சாந்திக்காக.....

*131,பாற்பண்ணை வீதி, 3ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி மத்தி, வடக்கு.*

உன்பிரிவால் துயருறும்: - குடும்பத்தினர்.

(38728) (43-11-17)


லக்ஷ்மி சினிமா இணுவில்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சிம்பு (இருவேடம்),ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்
மன்மதன்
தினசரி: 11.00,3.00, 7.00, 10.00 புதிய நேரம்
பதிவு ஆசனம்: 0776592008
(38707)



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது. 2 ஆவது வெற்றி வாரம்
தனுஷ், பிரியா நடித்த
ட்ரீம்ஸ் (ரீல்ஸ)
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே.)
வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக RAMBO-3
(சி-390523)

நிரஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் ராஜ்கிரன், ரம்யாகிருஸ்ணன் நடித்த
அன்னை காளிகாம்பாள் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) RAMBO-3

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் + அஜித், பூஜா நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30.
(சி-38750) ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சத்ரபதி
தினசரி 11.00 3.00 7.00 10.00 (பு.நே)




# பெண் காயம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்.செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் கண்ணாடி அறையின் கண்ணாடிகள் திடீரென வீழ்ந்து உடைந்ததில் அங்கு கடமையில் இருந்த பெண் ஒருவர் கண்ணில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றது. கண்ணில் கண்ணாடித்தூள்கள் வீழ்ந்ததனால், அவர் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (ஐ-6-86)

# மரண அறிவித்தல்கள்

## செல்வரட்ணம் சுஜிந்தன் (திவாகர்)



தண்ணீரூற்று, மாமூலையைப் பிறப்பிடமாகவும் இல.223,சில்வா வீதி, வட்டக்கச்சியை வசிப்பிட மாகவும் கொண்ட செல்வரட்ணம் சுஜிந்தன் (திவாகர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (16.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜனனியின் அன்புக் கணவரும் டிலக்சன், லிபிசன் ஆகியோரின் பாசமிகு தந்தை யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*223,சில்வா வீதி, வட்டக்கச்சி.* (சி-39114)(43-11-17)

தகவல்: குடும்பத்தினர்.

## முருகன் சிதம்பரப்பிள்ளை

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த முருகன் சிதம்பரப்பிள்ளை அவர்கள் நேற்று (17.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும் தேவி, இராசதுரை (உடுப்பிட்டி), இரவிச்சந்திரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சற்குரு (டோகா), திலகமலர், மணி ஆகியோ ரின் பாசமிகு மாமனாரும் சசிதேவி, சத்தியபாமா, சதீஸ் (சவூதி) சஞ்சீவ், ராஜீவ், சிந்துஜா, மிரேஸ், கோபிகா, சோபிகா, ஜரோசன், புஸ்பராசா, வேணு ஆகியோரின் பாசமிகு பேரனும் சாருஜன், தர்ஷன், டிலக்ஷன், கோபிகன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2004) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கவுந்தில், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (சி-39112)(43-11-17)

தகவல்: சி.இராசதுரை (மகன்), ராஜன் சலூன், உடுப்பிட்டி.

## நல்லையா நடராசா

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரம், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா நடராசா அவர்கள் நேற்று (17.11.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் மாதவி (நோர்வே), உமாகரன் (யாழ்.தொலைத்தொடர்பு நிறுவனம்), சிவாகரன் (சுன்னா கம், திருமகள் அழுத்தகம்) ஆகியோரின் தந்தையாரும் நாகவேல் சந்திரன் (நோர்வே), பூமகள் ஆகியோரின் மாமனாரும் மேகலை, சகானா, காயத்திரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.11.2004) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொட்டோலை லேன், துர்க்காபுரம், தெல்லிப்பழை.* (38732)(43-11-17)

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## மரியாம்பிள்ளை யோசேப்



தாளையடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட மரியாம்பிள்ளை யோசேப் அவர்கள், நேற்று முன்தினம் (16.11.2004) செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் மரியாம்பிள்ளை - எட்வீசம்மா அவர்களின் அன்பு மகனும் மேரிபிலோமினாவின் அன்புக் கணவரும எமில்ராஜன், ஆன்ஸ்றஜினி, டொனால்ட் றீகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோர்ஜ் ஜெயக் குமார், மேரி அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும் டனிசியனின் அன்புப் பேரனும் அன்ரனி மரியமலர், மரியாம்பிள்ளை செபமாலை, ஹென்றிக்லீலிமலர், சகாயநாதன் - ஜசிந்தஞானம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.11.2004) வியாழக்கிழமை இல.01, கோயில் வீதியில் உள்ள இல்லத்தில் இருந்து பி.ப. 12.30 மணிக்கு தாளையடியில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, (20.11.2004) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாளையடி கிழக்கு, தாளையடி.* (38730)(43-11-17)

தகவல்: எமில்ராஜன் (மகன்).

## செல்லையா கந்தையா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாக வும் கொண்ட செல்லையா கந்தையா நேற்று (17.11.2004) புதன் கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா - பசுபதியின் மகனும் கட்டுவனைச் சேர்ந்த பொன்னம்பலம் - இராசம்மாவின் மருமகனும் ராணியின் அன்புக் கணவரும் நீனா, ஹர்சுனா, கயன் ஆகியோரின் தந்தையும் தருமலிங்கம், நவரத்தினம் (கனடா) காலஞ்சென்ற சுப்பிரமணியம், மகேஸ்வரி (ஜேர்மனி), பொன்னம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு, நீர்வேலி. T.P: 0602 212758* (38729)(38-43-11-17)

தகவல்: செ.தருமலிங்கம் (சகோதரன்).

# ஆசிரிய நியமனத்துக்குத் தெரிவானோருக்கு நவம்பர் 30 முதல் நேர்முகப் பரீட்சை

காரைதீவு,நவ.18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றவென ஜி.சீ.ஈ. (உயர்தரம்) சித்தியடைந்தவர்களில் பரீட்சை மூலம் தெரிவானவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நவம்பர் 30 ஆம் திகதி முதல் டிசெம்பர் 10 ஆம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண கல்வியமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற 1500 பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படும்.

திருகோணமலையிலுள்ள வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் இந்நேர்முகப் பரீட்சை நடைபெறுமென கூறப்படுகிறது.

பெரும்பாலும் அடுத்த ஆண்டு புதிய தவணை ஆரம்பமாகும்போது பிரஸ்தாப 1000 ஆசிரியர்களும் கடமையேற்க வேண்டிவருமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆங்கில ஆசிரியர்கள் 400 பேரும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 350 பேரும் எஞ்சிய 250 பேரும் ஏனைய பாடநெறிகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர். (ஐ)

# பதுளைக்கான ரயில் சேவை மண்சரிவினால் தடைப்பட்டது

## நானுஓயாவில் பாதைக்குக் குறுக்கே பாறாங்கல்

ஹாலிஎல,நவ.18

நானுஓயாவுக்கு அருகில் ஏற்பட்டுள்ள மண்சரிவு காரணமாக கொழும்பிற்கும் பதுளைக்கும் இடையிலான அனைத்து ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை நானுஓயாவுக்கு அருகில் ஏற்பட்ட மண்சரிவினால் பாரிய கல்லொன்று ரயில் தண்டவாளத்துக்கு குறுக்கே விழுந்துள்ளது. இதனால், தண்டவாளங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இச்சீருலைவால் கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் சில ரயில்கள் மட்டும் நானுஓயா வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பயணிகள் நானுஓயாவிலிருந்து பதுளை வரை பஸ்களில் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

மத்திய மலையகப் பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டுவருகின்றன.

நானுஓயாவில் ரயில் பாதைக்குக் குறுக்காக விழுந்துள்ள மண்ணையும் கற்களையும் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும், அப்பணிகள் உடனடியாகப் பூர்த்தியாவதற்கான சாத்தியம் இல்லை என ரயில்வேக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

அப்பகுதிகளில் தொடர்ந்தும் பல மண்சரிவுகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தடைப்பட்டுள்ள ரயில்சேவை இன்று மாலை அல்லது நாளை மீண்டும் ஆரம்பிக்கப்படக் கூடும் எனத் தாங்கள் நம்புகிறார்கள் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-க)

# தலைவரின் பிறந்த நாளன்று மருத்துவ முகாம்

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்தநாளை ஒட்டி இலவச மருத்துவ முகாம் ஒன்று வடமராட்சி அரசியல்துறையினரால் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி மேற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் கண், நீரிழிவு நோய்கள் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும். (ஐ-173)

# தரம் 9 பொதுப்பரீட்சை திங்களன்று ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தரம் 9 இற்கான பொதுப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வழமைபோல் வினாத்தாள்களை 24 கல்வி வலயங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

திங்களன்று (22.11.2004) முதல்மொழியும் சமயபாடமும் நடைபெறும். செவ்வாயன்று (23.11.2004) வரலாறும் சமூகக்கல்வியும் அழகியற்கல்வியும் நடைபெறும். புதன்கிழமை (24.11.2004) கணிதமும் இரண்டாம் மொழியும் நடைபெறும்.

பின்பு 29 ஆம் திகதி திங்கட்கிழமை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடம் இடம்பெறும். 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆங்கிலமும் சுகாதாரமும் உடற்கல்வியும் இடம்பெறுமென மாகாணக் கல்விப்பணிமனை அறிவித்துள்ளது.

பரீட்சை முடிந்த பிற்பாடு குழுமுறையில் தரம் 9 கற்பிக்கும் பாட ஆசிரியர்களே மதிப்பீட்டு பணியிலீடுபடுவர். பரீட்சை நிலைய ஏற்பாடுகளை அந்தந்த வலயக்கல்விப் பணிப்பாளர்களே மேற்கொள்வர். (ஐ)

## கொழும்பு துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா சின்னக்குளம் வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் இச்சிறுவன் கொழும்புத் துறைமுக வாயிற்கதவுவரை வந்ததற்கான காரணம் குறித்து விசாரிக்கவே தாங்கள் அவனைக் கைது செய்துள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இச்சிறுவன் விசாரணைக்காகத் துறைமுகப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளான். (ஐ-க-6)

## வாழைச்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொலையுண்டவர் வெளிநாட்டுவேலை வாய்ப்பு நிலையமொன்றின் உப முகவராக பணிபுரிந்துவந்தார் எனவும் -

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இக்கொலை இடம்பெற்றுள்ளதாகத் தாங்கள் சந்தேகிக்கின்றார்கள் எனவும் - வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவவேளை கொலையாளி மதுபோதையில் காணப்பட்டுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகக் கூறப்பட்டது. தலைமறைவாகியுள்ள சந்தேகநபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வாழைச்சேனை பொலீஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறே இக்கொலைக்குக் காரணம் எனக் கிழக்குப் பிராந்தியப் பிரதி பொலீஸ்மா அதிபர் நெவில் விஜேசிங்க தெரிவித்தார். (ஐ-க-6)

## வடமராட்சி கிழக்கில் வீதிகள் மோசம்

அடைமழையைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு வீதிகள் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றன. 2 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்தபோதிலும் பல வீதிகள் திருத்தப்படாததினால் மழையைத் தொடர்ந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றது. (ஐ-182)

## தலைவர் பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழப் பிரதிநிதிகளும் மத்திய கல்லூரி மாணவர்கள் குழுவினரும் அடங்குவர்.

பல்கலைக்கழக சமூகத்தின் கேடயத்தினை மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார், செயலாளர் சிவகரன் ஆகியோரும் -

மத்தியகல்லூரிச் சமூகத்தின் கேடயத்தினை மத்திய கல்லூரி மாணவர் முதல்வர்களும் -

அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கையளித்தனர்.

இந் நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-12)




மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

உத்தரவாதம் உண்டு

விலை 14,000/= மட்டும்

IDD ரூபா 25/=மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம்.

கையிருப்பு முடியும்வரை மட்டும் உடனே விரையுங்கள்!

மேலதி விவரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

OFFICE:- இல. 185, முதலாம் மாடி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7070, 0712 399 220, 0777 281 521.

SHOP:- 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-39113)(29-11-17)


# உரிய சம்பள உயர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

நாம் பதவிக்கு வருவதற்கு முன்னர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். அந்த வாக்குறுதிகளுக்குக் குந்தகமாக அமையும் வகையில் அரசு நடந்துகொண்டால் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பித்த உடனேயே மாலை நான்கு மணிக்கு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாம் அனைவரும் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடி அதுபற்றி ஆராயவுள்ளோம். அதன் பின்னர் அரசுக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளின் சாதக பாதகங்கள் பற்றி ஆராய்வோம்.

இந்த வரவு - செலவுத்திட்டம் நாட்டு மக்களுக்குப் பாதகமானதாக இருந்தால் நாளை மறுதினமே வீதிக்கு இறங்கிப் போராடத் தொடங்கிவிடுவோம் - என்றார் அமைச்சர் லாலகாந்த.

மேற்படிதொழிற்சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைப் பார்த்து "ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அறிமுகப்படுத்திய 'ரட்ட பெரட்ட' (நாட்டை முன்னோக்கி...) என்ற திட்டத்தின் மீது உங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?' என்று அமைச்சர் லால்காந்த பகிரங்கமாகக் கேட்டார்.

ஆனால், அங்கு வந்திருந்தவர்கள் அதை நாம் நம்பவில்லை என ஏகோபித்த குரலில் சத்தமிட்டுப் பதிலளித்தனர்.

சற்றும் எதிர்பாராத இந்தப் பதிலின் காரணமாக வாயடைத்துப்போன அமைச்சர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு தனது உரையை நிகழ்த்தி முடித்தார். (ஐ-க-6)

## புதிய அரச அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டப்பணிப்பாளராகப் பதவியேற்பதால் ஏற்படும் இடத்துக்கே இவர் இடமாற்றம் செய்யபடவிருக்கிறார்.

மன்னார் அரச அதிபராகப் பணியாற்றும் எஸ்.விஸ்வலிங்கம் வவுனியா அரச அதிபராக இடமாற்றம் பெறவிருக்கிறார். (ஐ-3)

## சம்பள உயர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இக்கூட்டமைப்பு சமர்ப்பிக்கும் வரவு - செலவுத்திட்டத்தில் அந்த அளவுக்கு சம்பள அதிகரிப்பு இருக்காது என்பது ஓரளவு உறுதியாகிவிட்டது.

எனினும், எஞ்சிய சம்பள அதிகரிப்பை மூன்று காலகட்டங்களில் பிரித்து வழங்குவது பற்றிய வாக்குறுதி ஒன்று - அல்லது முன்னறிவிப்பு ஒன்று - இன்றைய வரவு - செலவுத்திட்ட யோசனைகளில் இடம்பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வரவு - செலவுத்திட்டத்துக்கு முன்னரே- பல பொருள்களின் விலைகளை அரசு உயர்த்திவிட்டது.

மானியங்கள் இல்லாததால் - அல்லது அவை வெட்டப்பட்டுவிட்டதால் - அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகள் கூட பெருமளவு அதிகரித்துவிட்டன. எனவே, வரவு - செலவுத்திட்டத்தில் புதிய விலை அதிகரிப்புக்கள் பற்றிய அறிவிப்புகளை எதிர்பார்க்க வேண்டியதில்லை என சில அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் கடந்த மாதத்தில் சர்வதேச சந்தையில் பீப்பாய் ஒன்று 55 டொலராக கிடுகிடுவென உயர்ந்த மசகு எண்ணெயின் விலை, இப்போது 45 டொலராக வீழ்ச்சியடைந்துவிட்டது. எனினும் சர்வதேசச் சந்தை விலை அதிகரிப்பை அடுத்து இலங்கையில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள்களின் விலை, இதுவரை இங்கு குறைக்கப்படவில்லை.

இந்நிலைமை, புதிய வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதில் நிதி அமைச்சருக்கு இருந்த நெருக்கடிகளை ஓரளவு தளர்த்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளுக்கும், அரச நிவாரணங்களைப் பெறுபவர்களுக்கும் கூடிய நன்மை பயக்கும் வகையில் இந்த வரவு - செலவுத்திட்டம் அமையும் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அந்த நன்மைகள் காலம் தாழ்த்திக் கிடைப்பனவாகவே நிதியமைச்சரின் இன்றைய யோசனைகளில் பிரஸ்தாபிக்கப்படும் என நம்பப்படுகின்றது.

அளவுக்கு மிஞ்சிய துண்டுவிழும் தொகையைச் சமாளிப்பதற்கு நிதி அமைச்சர் கூறப்போகும் யோசனைகள் குறித்து நேற்று பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. (ஐ-6)

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்று விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த விடயம் குறித்து கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று தமிழ்ச் செல்வனுடன் விவாதித்தார் என்று அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புறுஹொவ்டேக்கும் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சமாதானச் செயலக இணைப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

திருகோணமலைத் துறைமுகத்தை அண்மித்த பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் எவையும் இல்லை எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளமை, நாகர்கோயில் பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்கக் காவல் நிலைகள் முன்நகர்தப்பட்டிருக்கின்றன என்று பாதுகாப்பு அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் ஆகியவை குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது எனக் கண்காணிப்புக் குழுத் தரப்பினர் தெரிவித்தனர்.

நாகர்கோயில் முன்னரங்கக் காவல் நிலைகள் நகர்த்தப்பட்டமை குறித்த பிரச்சினையை பிராந்திய மட்டத்திலான புலிகள் - படையினர் சந்திப்பின்போது ஆராய வேண்டும் என்றும்-

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் மட்டுமின்றித் தளபதிகளும் இலங்கை இராணுவ உயரதிகாரிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆலோசனைகளை முன்வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை நிலைமை தொடர்பாகக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் எதுவும் துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில் அதனைப் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்தது. இதனையடுத்தே தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. (ஐ-க-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.